விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 07 வெள்ளிக்கிழமை (20.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

## கூட்டமைப்பினர் கூறுவதெல்லாம் பொய்;
## ஈ.பி.டி.பிக்கும் - கூட்டமைப்புக்கும் இடையில்
# எழுதப்படாத ஒப்பந்தம்
# ஏற்படுத்தப்பட்டிருந்தது

### தேவையெனின் ஆதாரங்களை வெளியிடத் தயார்
### ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சவால்

(யாழ்ப்பாணம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதெல்லாம் பொய்யாகும். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப் பட்டிருந்தது. அவசியம் ஏற்படின் ஆதாரங்களை வெளியிடத் தயார் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் பகிரங்க சவால் விடுத்துள்ளார். மேலும் கூட்டமைப்பினர் தமிழ் மக்களிடையே இரட்டை வேடம் போடுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (23-ம் பக்.)

### கேப்பாப்பிலவுக்கு சென்ற சிங்கள இளைஞர்கள்
## படையினரால் விரட்டியடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கேப்பாப்பில வில் நில விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சந்திக்கச் சென்ற தென்பகுதி இளைஞர்களை படையினர் விரட்டியடித்துள்ளனர்.

தென்பகுதியில் இருந்து கிறிஸ் தவ மதகுரு ஒருவரின் தலைமை யில் இரு பஸ் வண்டிகளில் 23

## பிரச்சினைகளை தீர்த்து நாட்டை முன்னேற்றுவது அவசியம் -- பிரதமர்



(கொழும்பு)

கடந்த கால பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டு நாட்டை முன்னே ற்றப் பாதையிலிட்டுச் செல்வது அவ சியம் என பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்துள்ளார். 23

### தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில்
## குழந்தை மருத்துவ நிபுணரை நியமிக்கக் கோரி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் குழ ந்தை மருந்துவ நிபுணர் இன்மை யால் கடந்த 7 வரு டங்களில் 12 தாய் மார்கள் உயிரிழந் துள்ள 23



## உறவினை மேம்படுத்த காலம் கனிந்துள்ளது - ஈரான் சபாநாயகர்

(கொழும்பு)

இலங்கையுடனான வர்த்தக உறவினை மேம்படுத்த வேண்டிய காலம் கனிந்துள்ளதாக, ஈரானின் சபாநாயகர் அலி லரிஜானி தெரிவி த்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அவர், நேற்று கொழும்பில் உள்ள ஈரா னிய தூதரகத்தில் நடைபெற்ற நிக ழ்வொன்றில் வைத்து 23

## வட மாகாண அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பதில்
### ஆளுநர் - பதில் முதலமைச்சர்களிடையே முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அமைச்சுக்களு க்கான செயலாளர்களை நியமிப்ப தில் மாகாண பதில் முதலமைச்சர் க.சர்வேஸ்வரனுக்கும், மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நேற்று வியாழக்கி ழமை நடைபெறவிருந்த செயலாள ர்கள் மாற்றம் ஆளுநரால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண செயலாளர்கள் நியமனம் தொடர்பாக மாகாண ஆளுநரும், பதில் முதலமைச்சரும் நேற்று சந்தித்தனர்.

இதன்போது, மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக தெய்வே ந்திரனை நியமிக்க 23

## பேண்தகு எதிர்காலத்தை அடைதலே இலங்கையின் பிரதான குறிக்கோள்
### பொதுநலவாய நிறைவேற்று சபையில் ஜனாதிபதி

(கொழும்பு)

பேண்தகு எதிர்காலத்தை அடை தல் ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையினதும் பிரதான குறிக் கோளாகும் என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொதுநலவாய அமைப்பின் நிறைவேற்று சபையில் நேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுநலவாய நிறைவேற்று சபையில் கலந்துகொள்ள வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன பிரித்தானிய பிரதமர் தெரேசா மே அம்மையார் வரவேற்றார்.

உலக நாடுகள் பலவற் 23

## ஜனாதிபதி மைத்திரியை லண்டனிலிருந்து வெளியேறக் கோரி பாரிய ஆர்ப்பாட்டம்




(லண்டன்)

லண்டனில் இடம்பெறும் பொதுநல வாய நாடுகளின் தலைவர்கள் மாநாட் டில் பங்கேற்றுள்ள ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவை லண்டனை விட்டு வெளியேறக் கோரியும் சர்வ தே சத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் புலம்பெயர் தமிழர்கள் புலிக்கொடி ஏந்திபாரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 23

### 600 போதை மாத்திரைகளுடன்
## இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

போதை ஏற்படுவதற்காக இளை ஞர்கள் பயன்படுத்தும் 600 போதை மருந்துகளை வைத்திருந்த இரு வர் நேற்று இரானி சந்தியில் கைது செய்யப்பட்டதாக தம்புத் தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவை மற்றும் பதுளை பகுதிகளை சேர்ந்த 27 23

## கொழும்பு ஹொரணை பிரதேசத்தில் இறப்பர் தொழிற்சாலையில் தீ விபத்து
### 5பேர் பலி; 15 பேர் படுகாயம்



(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான ஹொரணை யிலுள்ள இறப்பர் தொழிற் சாலையில் வெடிப்பு சம்ப வத்தில் ஐவர் உயிரிழந் துள்ளனர்.

மேலும் 5 பேர் படு காயமடைந்த 23

### எரிபொருள் விலையை உயர்த்துவதா? இல்லையா? என
## ஜனாதிபதியும் பிரதமருமே இறுதி முடிவெடுப்பார்கள்
### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையை உயர்த் துவதா? இல்லையா? என்பது தொட ர்பாக இறுதி முடிவை ஜனாதிபதி மற்றும் பிரதமரே எடுப் 23



# வேலணை மத்திய கல்லூரி அதிபர் தீவக வலய முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம்

(வேலணை)

தீவக கல்வி வலயத்தில் நேற்றையதினம் வேலணை மத்திய கல்லூரி அதிபர் சிவசாமி கிருபாகரன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இக் கவனயீர்ப்பு போராட்டத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

தீவக வலய கல்விப் பணிப்பாளர் தம்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார் என்றும் இது தொடர்பில் கல்வி உயர் அதிகாரிகள் நீதிவிசாரணை நடத்த வேண்டும் எனக் கோரியுமே இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவக வலயத்தின் முன்றலில் அதிபர் ஒருவர் பதாகையை தாங்கிய வண்ணம் இருப்பதையடுத்து வலயக் கல்விப் பணிப்பாளர் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். அங்கு வந்த பொலிஸார் அதிபருடன் கதைத்துவிட்டு அவரின் கவனயீர்ப்பு போராட்டத்தில் தாம் தலையிட முடியாது எனக் கூறி விட்டுச் சென்றனர். மாலை 4.30 மணியுடன் அதிபரின் கவனயீர்ப்பு போராட்டம் முடிவுக்கு வந்தது. (ம)


## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205



19.04.2018-26.04.2018 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுக்ளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

இப்போது நாம் புதிய முகவரியில்

விதுனா லொச்

ஜம்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409

(ஐ-2312)


# இன ரீதியாக பிளவுபட்ட நாடு சீர்குலைந்துவிடும்-சபாநாயகர்

(கொழும்பு)

இனம் என்ற ரீதியில் பிளவுபட்டிருக்கும் நாடு ஒன்று சீர்குலைந்துவிடும் . இவ்வாறான நாட்டிற்கு எதிர்காலம் இல்லை என்றும் உலகில் அபிவிருத்தி கண்ட அனைத்து நாடுகளும் அவ்வாறான அபிவிருத்தி நிலையை அடைந்தமை நாடுகளுக்கிடையே உள்ள இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை பயன்படுத்தியே என்றும் சபாநாயகர் கருஜய சூரிய தெரிவித்தார்.

எமது மத்தியிலுள்ள தேசிய பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்வேண்டும். இலங்கையில் மத மற்றும் தேசிய நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்காக செயற்படும் பாராளுமன்றக்குழுவினால் ஏற்பாடு செய்திருந்த சர்வமதக்கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே சபாநாயகர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

பாராளுமன்றத்தில் இடம்பெறும் சர்வமத சர்வகட்சியின் இந்த கலந்துரையாடல் வரலாற்று பயணத்திற்கும் நாட்டின் சுபீட்சத்திற்கும் வித்திடும் ஒன்றாக அமைய வேண்டும் என்று தான் பிரார்த்திப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

கடந்த மாதத்தில் அம்பாறையிலும் அதனைத்தொடர்ந்து கண்டியிலும் ஏற்பட்ட துர்ப்பாக்கிய சம்பவத்தினால் நாட்டுக்கும் எமது பொருளாதாரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இதேபோன்று உலகின் மிகவும் கௌரவத்தை பெற்றிருந்த எமது நாட்டின் நற்பெயருக்கும் இதனால் பெரும் களங்கம் ஏற்பட்டது என்று சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்படுவது முக்கியமாகும் என்றும் வலியுறுத்தினார். (ம)

# நாட்டின் அபிவிருத்திக்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானதாகும்

## ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன

தேசிய பாதுகாப்பையும், சகவாழ்வை யும் கட்டியெழுப்பி நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வில்உரையாற்றுகையில் அவர் இந்த கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு முக்கியமானதா கும்.

அதே நேரம் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையின் சக்தி ஊடாக மனித நேயத்தையும் வளர்க்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)


## நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களா?



உங்களின் ஓய்வுக்காலத்தினை அனுபவிக்கும் அதே வேளை பணம் சம்பாதிப்பதையும் தொடர இதோ ஓர்வாய்ப்பு. ஒரு கதவு மூடப்படும் போது நாம் இன்னுமொரு கதவை உங்களுக்காக திறக்கின்றோம். உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள்.

- வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை.
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்களும் இணைந்து கொள்ளலாம்.
- வயதெல்லை 20-60

Contact:62/6 Stanley Road, Jaffna
T.P:0777121868


(ஐ-2330)


# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் Dr.கந்தசாமி அரவிந்தன்

### (RMO-Anti Malaria Compaign Mannar)

தோற்றம்:11.12.1970 மறைவு:07.03.2018



கடந்த 07.03.2018 அன்று சிவபதமடைந்த எமது தெய்வத்தின் பூதவுடலை முழங்காவிலில் இருந்து எமது இல்லத்திற்கு கொண்டு வருவதற்கு பேருதவி செய்த வேரவில், முழங்காவில், கிளிநொச்சி, மன்னார் வைத்தியர்களிற்கும் மற்றும் உத்தியோகத்தர்களிற்கும் அரசியல் பிரமுகர்களிற்கும் மனம் நிறைந்த நன்றிகள். அத்தோடு இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றிய சமயகுருமார்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், அரசியல் பிரமுகர்கள், பிரதேச செயலர்கள், வங்கியாளர்கள், மன்னார் மாவட்ட மக்கள், நண்பர்கள், உறவினர்களிற்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலம் தமது இரங்கலை வெளியிட்டோரிற்கும் நன்றிகள். இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய கல்வித்திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வர்த்தக பிரமுகர்கள் ஆகியோரிற்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள். அத்தோடு எமது துயரில் பங்கு பற்றி தொலைபேசி வாயிலாகவும், முகப்புத்தகம் மூலமாகவும் பகிர்ந்து கொண்ட வெளிநாட்டு, உள்நாட்டு நண்பர்கள் மற்றும் உறவினர்களிற்கும் பத்திரிகை மூலம் தமது அனுதாபங்களை வெளியிட்டோரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

கடந்த 07.03.2018 அன்று சிவபதமடைந்த அன்னாரது அந்தியேட்டி கிரியைகள் நாளை (21.04.2018) சனிக்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் மறுநாள் (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

நாகப்பாவளவு
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை

குடும்பத்தினர்
T.P:-0212262407

(ஐ-2322)

# அன்னை பூபதிக்கு யாழ்.பல்கலையில் நினைவேந்தல்





(படங்கள்:-உ.சாளின்)

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களால் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழீழத் தேசத்தினுள் நுழைந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறித் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது.

அவ்வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தமிழீழத் தேசியத்துக்கு ஆதரவாக தமிழீழ மக்கள் பல வகைகளில் தமது பங்களிப்பை வழங்கினர்.

இந்தத் தேசத்திற்கான பங்களிப்புக்களின் சிகரமாக தியாகத்தின் அதியுயர் வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது. 'இந்தியப் படை உடனடியாகப்போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்'- என்று கோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் அன்னை பூபதி அஹிம்சை வழியில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்த மரநிழலின் கீழ் அன்னை பூபதி தனது சாகும் வரையிலான உணவு ஒறுப்புப்போராட்டத்தை ஆரம்பித்தார்.

பெரும் நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் ஒரு சாதாரணப் பெண்மணி, குடும்பத் தலைவி, எவற்றிற்கும் அஞ்சாமல் தனது போராட்டத்தை அஹிம்சை வழியில் ஆரம்பிப்பதற்கு எத்துணை நெஞ்சுரமும் தியாக மனப்பான்மையும் அவருக்கு இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்கின்றோம் என மாணவர்கள் தெரிவித்தனர்.

எம்மைப் பாதுகாக்கவென வந்த இந்தியா இன்று இலங்கை இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாகவே மாறிவிட்டார்கள். இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். வீரச்சாவுகளை கண்டு நாம் பழகிப் போனவர்களே. எனது இறப்பை அடுத்தும், எமது நோக்கை நாம் அடைவோம் ஒருபோதும் அன்னையர் முன்னணி தளராது" என்று அன்னை பூபதி தியாக உணர்வோடு நெஞ்சுரத்தோடு முழங்கினார்.

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்குத் தனது சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி, இறுதி மூச்சு தமிழீழக் காற்றோடு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணியளவில் கலந்து பரவியது.

31 நாட்கள் அன்னை பூபதி என்கின்ற தமிழ்ப் பெண்மணியின் விடுதலை வேட்கையும் அதற்கான தியாகமும் நாட்டுப்பற்றின் சிகரமாக அமைந்தன.

இந்நிலையில் தியாக தீபம் அன்னை பூபதியின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று பிற்பகல் கடைப்பிடிக்கப்பட்டது. அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மாணவர்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (இ-4)

# அரசிலிருந்து விலகிய 16 பேரையும் பொதுஜன பெரமுன ஏற்றுக்கொள்ளும்

## மௌனம் கலைத்தார் பசில்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏற்றுக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான செயற்பாட்டாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் கொண்டுவரப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 அமைச்சர்களும், துணை சபாநாயகரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், குறித்த 16 பேரும் பதவி விலக வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அழுத்தங்கள் அதிகரித்தன.

அதனை தொடர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த 16 பேரும் அரசாங்கத்தில் வகித்த சகல பதவிகளிலிருந்தும் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஈரான்-இலங்கை சபாநாயகர்கள் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஈரான் சபாநாயகர் அலி லரிஜானி (Ali Larijani) மற்றும் சபாநாயகர் கருஜெயசூரிய ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. (இ-7)

# பிரதி சபாநாயகர் முஜிபுர் ரஹ்மான்

## ஐ.தே.க. உறுப்பினர்கள் பரிந்துரை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் பதவிக்கு கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை நியமிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் 24 பேர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது அப்போது பிரதி சபாநாயகராக இருந்த திலங்க சுமதிபால பக்கசார்பான முறையில் நடந்துகொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குற்றம் சுமத்தி வந்தனர்.

இதனையடுத்து பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தனது பதவியை இராஜினாமா செய்தார். இந்நிலையில் தறபோது பிரதி சபாநாயகர் எவரும் நியமிக்கப்படவில்லை. எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது பிரதி சபாநாயகர் ஒருவரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி பாராளுமன்றத்தின் 225 பேரின் விருப்பின் பிரகாரம் பிரதி சபாநாயகர் நியமிக்கப்படுவார்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து தெரிவான முஜிபுர் ரஹ்மானை பிரதி சபாநாயகராக பதவிக்கு பரிந்துரை செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் உட் பட ஒரு சில அமைச்சர்கள்24 பேர் கையொப்பமிட்டு கடிதமொன்றை கையளித்துள்ளனர். (இ-7)

# சிவசங்கர் பதவி விலகல்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் 14ஆவது தலைவராக இருந்த வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கர் ஒரு மாதகால கடிதத்தின் மூலமான முன்னறிவித்தலின் மூலம் தனது சொந்த காரணங்களுக்காக 20.04.2018 பதவி விலகுவது தொடர்பாக அமைச்சரிற்கும் அமைச்சின் செயலாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக கடிதம் எனக்கும் பிரதியிடப்பட்டுள்ளது என பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தலைவருடன் கலந்துரையாடியதிலிருந்து தனது தனிப்பட்ட காரணங்களுக்காக பதவியிலிருந்து விலகினாலும் அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம்சபையின் இயக்குநர்சபையின் அங்கத்தவராக இருப்பாரென்றும் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் யாவும் தொடர்ந்தும் நடைபெற புதிய தலைவருடன் செயற்படுவார் என்றும் விரைவிலேயே சபையினை எந்தவித பிறழ்வுகளும் இன்றித் தொடர்ந்தும் வழிநடத்தக்கூடிய புதிய தலைவர் நியமனம் நடைபெறும் என்றும் தெரிவித்தார். (இ-9)


## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

## Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

(3680)

## கிறிஸ் ஹெயில் 'புயல்' சதம்

# அஷ்வினின் பஞ்சாப் 3ஆவது வெற்றி



ஹெய்ல் புயல் வேகத்தில் சதம் விளாச, ஹைதராபாத் அணிக்கு எதிரான ஐ.பி. எல்., லீக் போட்டியில், பஞ்சாப் அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தியாவில், 11வது ஐ.பி.எல்., சீசன் நடக்கிறது. நேற்று மொஹாலியில் நடந்த 16ஆவது லீக் போட்டியில் பஞ்சாப், ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணியின் தலைவர் அஷ்வின் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுல் (18) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். ரஷித் கான் வீசிய 3ஆவது ஓவரில்,கெய்ல் அடுத்தடுத்து 4 சிக்சர் அடிக்க, 27 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

மயங்க் அகர்வால் (18) நிலைக்கவில்லை. கருண் நாயர் (31) ஆறுதல் தந்தார். 'புயல்'வேகத்தில் ஓட்டம் சேர்த்த கெய்ல், 58 பந்துகளில் சதமடித்தார். ஐ.பி.எல்., அரங்கில் இவர் அடித்த 6ஆவது சதம். தவிர, இந்த சீசனில் பதிவான முதல் சதம்.

20 ஓவர்களில் பஞ்சாப் அணி, 3 விக்கெட்டுக்களை மாத்திரம இழந்து 193 ஓட்டங்கள் எடுத்தது.

கெய்ல் (104 ஓட்., 63 பந்து, 11 சிக்சர்), பின்ச் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்..

**தவான் காயம்**

கடின இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்பமே 'ஷாக்' தான். சந்தித்த முதல் பந்தில், முழங்கையில் காயம் அடைந்து திரும்பினார் தவான் (0). சகா (6), யூசுப் பதான் (19) ஏமாற்றினர். 39ஆவது பந்தில் அரைச்சதம் அடித்த வில்லியம்சன், 54 ஓட்டங்கள் எடுத்தார். ஹூடா (5) கைவிட,

ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, இத் தொடரில் முதல் தோல்வியை பதிவு செய்தது.

மணிஷ் பாண்டே (57), சாகிப் (24) ஆட்டமிழக்காமல் இருந்தன்ர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்து பஞ்சாபின் வெற்றிக்கு கைகொடுத்த கிறிஸ் ஹெயில் தெரிவானார்.

**மகளுக்கு சமர்ப்பணம்**

சதம் அடித்த கெய்ல் கூறுகையில்," முதன் முறையாக இந்தியா வந்துள்ள என் மகள் கிறிஸ்லினாவுக்கு, இன்று பிறந்த நாள். நேற்று அடித்த சதத்தை மகளுக்கு சமர்பிக்கிறேன்," என்றார்.




# புனேயில் சாதிக்குமா சென்னை?

ஐ.பி.எல்., தொடரின் இன்றைய 17ஆவது லீக் போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

சொந்தமண் புனே என இடம்மாறினாலும் சென்னை அணியின் இலக்கு வெற்றியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 11ஆவது சீசன் நடக்கிறது. இன்று மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் நடக்கவுள்ள லீக் போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன. இந்த இரு அணிகளும் இரண்டு ஆண்டு தடையில் இருந்து மீண்ட பின் முதன் முறையாக நேருக்கு நேர் சந்திக்கின்றன.

சென்னையில் இருந்து போட்டிகள் மாற்றப்பட்ட நிலையில், சொந்தமண்ணான புனேயில் இன்று களமிறங்குகின்றனர். கடந்த போட்டியில் தற்பட்ட தோல்வி, மைதான பராமரிப்பு தண்ணீர் பிரச்சினை என அடுத்தடுத்த குழப்பத்திற்கு இடையே விளையாட உள்ளனர்.

**ஆரம்பம் யார்?**

சென்னை அணிக்கு வோட்சனுடன் இணைந்து ஆரம்பம் வழங்கவுள்ள முரளி விஜய், கூடுதல் கவனத்துடன் விளையாட வேண்டும். சென்னை வீரர்கள் வெற்றியை நோக்கி களமிறங்குகின்றனர்.

எந்த இடத்தில் களமிறங்கினாலும், ராயுடு நம்பிக்கை தருகிறார். பில்லிங்ஸ், டுவைன் பிராவோ ஆபத்தில் கைகொடுக்க காத்திருக்கின்றனர்.

**தோனி எப்படி?**

கடந்த முறை விளாசிய தோனி, முதுகுவலியால் அவதிப்பட்டார். நேற்றைய பயிற்சியில் இவர் பங்கேற்காதது, சென்னை ரசிகர்களுக்கு சோகத்தை தந்துள்ளது. ஏற்கெனவே, கேதர் ஜாதவ் (தொடையின் பின் பகுதி காயம்), லுங்கிடி நாடு திரும்பியது,டுபிளசி(கைவிரல்) என முன்னணி வீரர் கள் களமிறங்க முடியாமல் உள்ளனர். அதேநேரம், கெண்டைக்கால் வலியால் பங்கேற்காமல் இருந்த ரெய்னா, துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட்டது ஆறுதலான விடயம்.

இன்று ஒருவேளை தோனி களமிறங்கவில்லை என்றால், ரெய்னா உடற்தகுதி பெறும் பட்சத்தில் தலைமைப் பொறுப்பேற்கலாம்.

**பந்துவீச்சு சுமார்**

வேகப்பந்துவீச்சில் வோட்சன், ஷர்துல் தாகூர் என எல்லாம் சுமார் ரகம் தான். சுழற்பந்துவீச்சாளர் தாகிர் விக்கெட் வீழ்த்தினாலும் 'சீனியர்' ஹற்பஜன், ஜடேஜாவின் சொதப்பல் தொடர்கதையாக உள்ளது. கடந்த மூன்று போட்டியில் மொத்தம் 16 விக்கெட்டுகள்தான் வீழ்த்தினர். ஓட்டங்களையும வாரி வழங்கினர். இது இன்று மாறும் என நம்பலாம்.

**ராஜஸ்தான் எப்படி?**

ராஜஸ்தான் அணியை, புதிய அணித் தலைவர் ரகானே திறம்பட வழிநடத்துகிறார். இவருக்கு ஆரம்பத்தில் ஷோர்ட் நல்ல இணைபாட்டம் தருவது பலம். கடந்த 4 போட்டியில் 185 ஓட்., குவித்துள்ள சஞ்சு சாம்சன், வாணவேடிக்கை காட்டுகிறார்.

ஆனால், திரிபாதி, 'காஸ்ட்லி' வீரர் ஸ்ரோக்ஸ் என பின வரும் வீரர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப, பொறுப்புணர்ந்து செயல்படவில்லை. 'வேகத்தில்' கௌதம் கவனம் ஈர்த்தாலும் குல்கர்னி, ரூ. 11.5 கோடிக்கு வாங்கப்பட்ட உனதகட் ஏமாற்றுகின்றனர்.

**அன்பிற்கும் உண்டோ...**

சென்னை அணி வீரர் ஹற்பஜன் சிங், வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,' பார்த்தாயா... எங்கள் அணியின் ரத கஜ துரக பதாதிகளை, அமெரிக்காவில் போய் மேட்ச நடத்தினாலும், விசில் போடதாரை தப்பட்டையோட, எமை வாழ்த்த தேரேறும் என் தமிழினம். உங்கள் அன்புக்கு நான் அடிமை. இது வேற லெவல் மாஸ்யா, அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்...,' என தமிழில் தெரிவித்துள்ளார்.

## போட்டிக்களம் புனேக்கு மாறினால் என்ன?

# 'விசில் போடு எக்ஸ்பிரஸ்' சென்னையிலிருந்து தனி ரயிலில் புறப்பட்ட சிஎஸ்கே ரசிகர்கள்




புனேவில் நடைபெறவுள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் போட்டியை காண்பதற்காக தனி ரயிலில் புனே புறப்பட்டுச் சென்றுள்ளனர் அந்த அணியின் ரசிகர்கள்.

காவிரி வாரியம் அமைக்கக் கோரிய போராட்டங்கள் தமிழகத்தில் வலுப்பெற்றது. இதனையடுத்து ஐபிஎல் போட்டிகளுக்கு எதிராக சென்னை சேப்பாக்கத்தில் கட்சிகள் போராட்டம் நடத்தின. இதனைத் தொடர்ந்து சென்னை சுப்பர் கிங்ஸின் உள்ளூர் போட்டிகள் புனேக்கு மாற்றப்பட்டன.

2 வருடாங்களுக்கு பிறகு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஐபிஎல் போட்டிகளுக்கு திரும்பிய நிலையில் சென்னையில் நடைபெறவிருந்த போட்டிகள் புனேக்கு மாற்றப்பட்டதால் சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்களும் இது தொடர்பாக தங்களது வருத்தத்தை பதிவு செய்தனர்.

இந்நிலையில் புனேயில் இன்று நடக்கும் போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இப்போட்டியை நேரில் பார்க்க விரும்பிய சென்னை ரசிகர்கள், அணி நிர்வாகத்தை அணுகினர். இதையடுத்து, 'விசில் போடு எக்ஸ்பிரஸ்' என்ற பெயரில் 'ஸ்பெஷல்' ரயில் ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து கிளம்பிய இந்த ரயிலில் 1000 ரசிகர்கள் புனே கிளம்பினர். அனைவருக்கும் மஞ்சள் நிற 'ஜெர்சி' வழங்கப்பட்டன.

இன்று காலை 8.30 மணிக்கு புனே சென்றடைவர். அங்கிருந்து, மீண்டும் சென்னை திரும்பி வரும் வரை பயணச் செலவு, சாப்பாடு, தங்குமிட வசதிகளை சென்னை அணி நிர்வாகம் செய்துள்ளது.

மஞ்சள் நிற ஆடையுடனும் சென்னை சுப்பர் கிங்ஸ அணி கொடியுடனும் ரசிகர்கள் தங்கள் புகைப்படங்களையும் வீடியோக்களையும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இதனை சென்னை சுப்பர் கிங்ஸ்ட்விட்டர்பக்கம்தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மீதான சென்னை ரசி கர்களின் அன்பு பாராட்டுக்குரியது என்று பலரும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 - 08 - 1949



உதிர்வு 21 - 03 - 2018

## லூயிஸ் பஸ்கால் பயிலோன் மரியதாஸ்

### (L.P.P. மரியதாஸ்)

**அன்புத் தந்தையே அழியாது உங்கள் நினைவலைகள்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுயரும் தெய்வத்துள் சென்றபோதும்
ஆறாத் துயர் எமது நெஞ்சை அனலாய் வாட்டுதே
அன்புடனும் பாசத்துடனும் சிறப்பாக வாழவைத்த
எமது தந்தையே நீங்கள் எப்பொழுதும் எமது
இதயத்தில் வீற்றிருப்பீர்கள்
கண்முன்னே வாழ்ந்த கால நினைவுகள்
நாட்கள் பல கடந்தாலும் என்றும் அகலாது
ஆல விருட்சமாய் செழித்து நிழல் தந்தீர்கள்
நிழல்தேடி ஏங்கி நித்தம் அலைகிறோம்
தந்தையே எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்கள்
கண்கள் நினைத்து கண்ணீர் சொரிகிறது
ஆறாத் துயரில் துடிதுடிக்கின்றோம்.

புணற்காடு. குடத்தனை. (C-2327) குடும்பத்தினர்

# தமிழின விடிவுக்காய் தன் உயிரைத் தியாகம் செய்த அன்னை பூபதி காலத்தால் மறக்க முடியாத தாய்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு





(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் விடுதலைக்காக அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்த்து உண்ணா நோன்பிருந்து அஹிம்சை வழியில் போராடி தன் இன்னுயிரை ஈகம் செய்த தியாகத்தின் சின்னமாய் விளங்கும் அன்னை பூபதி அவர்களது தியாகம் காலத்தால் மறக்க முடியாததாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

அன்னை பூபதி அவர்களின் நினைவு நாள் எழுச்சி நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் காரியாலயமான அறிவகத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரை நிகழ்த்துகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை-இந்திய இராணுவம் எமது தமிழ் மக்கள் மீது புரிந்த சொல்ல முடியாத வன்முறைகளை எதிர்த்து அதனை நிறுத்துமாறு கோரி எமது மக்களது விடுதலையை வலியுறுத்தி உண்ணா நோன்பிருந்து தன்னுயிரை ஈகம் செய்த அன்னை பூபதியின் தியாகம் என்றென்றும் போற்றத் தக்கது. எமது இனம் இருக்கும் வரை அன்னையின் புகழ் நீடித்து நிலைத்திருக்கும். எனத் தெரிவித்தார். இந் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராசா, சு. பசுபதிப்பிள்ளை, கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளின் உறுப் பினர்கள் மற்றும் கட்சியின் பிரதேச, வட்டார அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் உணர்வெழுச்சியாகக் கலந்து கொண்டனர். (இ-7)

# தமிழ் அரசியல் கைதி சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்று உண்ணாவிரதம்



(ஏறாவூர்)

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி, மட்டக்களப்பில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இடம்பெற்றது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணியால் மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப்பூங்காவுக்கு முன்னால் இந்த அடையாள உண்ணாவிரதம் இடம்பெற்றது.

அன்னை பூபதியின் நினைவு தினமான நேற்று தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி, இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியும் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான திருமதி செல்வி மனோகரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் சுசிகலா அருள்தாஸ் உள்ளிட்டோர் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளுக்காக அவரின் மீது கருணை காட்டி, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி, அவரை விடுதலை செய்ய வேண்டும். இதனை வலியுறுத்தி, அன்னை பூபதியின் நினைவு தினமான இந்தத் தினத்தில் நாங்கள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளோம்" என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியும் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான திருமதி செல்வி மனோகரன் தெரிவித்தார். (இ-7)

YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT
புதிய பிரிவுகள் ஆரம்பம்
30% OFF
Special OFFER
அழகுக்கலை
# Diploma in Beauty Culture & Hairdressing
# Advance Dip in Beauty Culture & Hairdressing
தையல்
# Certificate in Tailoring
# Diploma in Tailoring
ஆரி எம்பிராய்டரி
# Diploma in Aari Embroidery
கேக் ஐசிங்
# Certificate in Cake Making & Decorating
# Diploma in Cake Making & Decorating
சனி, ஞாயிறு 28/04/2018 அன்று 10.00 மணிக்கு
திங்கள் நாள் 30/04/2018 அன்று 10.00 மணிக்கு
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்.
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

## இராசி பலன்

**மீனம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பகையொன்று நட்பாகலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும், வியாபார விருத்தியுண்டு. வார்த்தையில் நிதானம் தேவை.

**மிதுனம்:** மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் கூடலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூமி சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கும்.

கிரகநிலை: புத | சூரி, சுக் | சந் | ராகு | கேது | சனி, செவ் | குரு

கிரகநிலை
சந்திராஷ்டமம்
விசாகம், அனுஷம்
மதியம் 12.18 மணிக்கு
மிதுன-சந்

20.04.2018
சித்திரை 07, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.27 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 11.41 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
வளவன்

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**துலாம்:** வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காலைப் பொழுதே கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

# யாழில் முதல்தர சந்தையாக மருதனார்மடம் சந்தை மாறும்

## தவிசாளர் தர்ஷன் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலே நவீன வசதிகளுடன் கூடிய முதல் தர அதிக வருமானம் ஈட்டுகின்ற சந்தையாக மருதனார் மடம் பொதுச்சந்தை எமது ஆட்சிக்காலத்தில் மாற்றியமைக்கப்படும் என வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன் தெரிவித்துள்ளார்.



மருதனார்மடம் பொதுச் சந்தையில் பிரதேச சபையின் தவிசாளர் நேற்று ஆய்வு மேற்கொண்டார். இதன்போது பிரதேச சபையின் உடுவில் அலுவலகப் பொறுப்பதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர், சந்தை மேற்பார்வையாளர், வருமானப்பரிசோதகர் ஆகியோரும் சென்றுள்ளனர்.

அங்கு வியாபாரத்தில் ஈடுபடுகின்ற வியாபாரிகளுடனும் நுகர்வோருடனும் சந்தையின் மேம்பாடு தொடர்பாக கலந்துரையாடினார்.

யாழ்.மாவட்டத்திலே அதிக வருமானத்தை ஈட்டுவதில் 2ஆம் இடத்தில் இருக்கின்ற மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் சௌகரியமான வசதிகளோடு அமைக்கப்பட்டு யாழ்.மாவட்டத்திலேயே முதல்நிலை பொதுச் சந்தையாக மாற்றியமைக்கப்படும் எனவும் தவிசாளர் க.தர்சன் உறுதியளித்துள்ளார்.

இதன்போது கிணறு, மலசலகூடம் புனரமைத்தல் மற்றும் திண்மக் கழிவகற்றல் போன்றன உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-89)

## வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் பதிவு மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

ஜே/240 தென்மயிலை, ஜே/246 மயிலிட்டி வடக்கு, ஜே/247 தையிட்டி கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கட்டுவன், மயிலிட்டி வீதிக்கு மேற்குபக்கமாக அமைந்துள்ள காணிகள் 13.04.2018 ஆம் திகதி தொடக்கம் பொதுமக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

எனவே அக்காணிகளின் உரிமையாளர்கள் உடனடியாகத் தத்தமது கிராம உத்தியோகத்தரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெல்லிப் பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

மேலும் காணி துப்புரவு செய்யும் போது வெட்டிய மரங்களை அகற்றுதல் தொடர்பாகப் பிரதேச செயலகத்தின் அனுமதியைப் பெற்று அகற்றிக் கொள்ளுமாறும் இதனை மீறும் பட்சத்தில் பொலிஸ் ஊடாகச் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கரம்பன் கிழக்கு ஞானவைரவர் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். நாளை சனிக்கிழமை விநாயகர் வழிபாடும் தொடர்ந்து 11 நாட்கள் மண்டாலாபிஷேகமும் நடைபெறும். (இ



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் குழந்தை மருத்துவ நிபுணரை நியமிக்கக் கோரி நேற்றைய தினம் கர்ப்பிணித் தாய்மார்கள் வைத்தியசாலை வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். (படங்கள் :-உ.சாளின்)



செலான் "பஹஷற" சமூக நல திட்டத்தின் கீழ் செலான் வங்கியின் நெல்லியடிக் கிளையானது யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் அண்மையில் நூலகம் ஒன்றை புனரமைத்து வழங்கியது. இதன் போது 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான தளபாடங்கள், 02 மடிக் கணனிகள், புத்தகங்கள் என்பன பாடசாலை சமூகத்திற்கு வழங்கப்பட்டன. (படங்கள்:-மகாலிங்கம்)

# அடிப்படை வசதிகளின்றி குருநகர்ப் பகுதி மக்கள்

## யாழ்.மாநகர சபையினர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியின் நீர்த் தாங்கியடி மற்றும் சென்றோப் பகுதிகளில் அடிப்படை வசதிகளின்றி வாழும் மக்களின் நீண்டகால பிரச்சினைகளை யாழ். மாநகர சபை மேயர் இ. ஆனோல்ட் மற்றும் ஆணையாளர் இ.த. ஜெயசீலன் உள்ளிட்ட குழுவினர் நேற்று நேரில் ஆராய்ந்தனர்.



குருநகர்ப் பகுதி மக்களின் நீண்டகாலப் பிரச்சினையாக நெருக்கடியான கழிவுவாய்க்கால், வீதி சீரின்மை, வீதி விளக்குகள் இன்மை போன்றவற்றை நிவர்த்தி செய்யுமாறு அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையின் பெயரில் அப்பகுதிகளிற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது அங்கு காணப்படும் நெருக்கடியை தீர்ப்பதற்காக குறித்த கிராமத்தின் சகல அமைப்புக்கள் மக்களின் பிரதிநிதிகளையும் துறைசார் வல்லுநர்களையும் ஒருங்கிணைத்து ஆராய்ந்து அந்த தீர்மானத்திற்கமைய குறிப்பிட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய முடிவெடுக்கப்பட்டது.

அதேநேரம் அப்பகுதி மக்களின் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் தொடர்பில் சபையின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பில் சபையின் தீர்மானத்திற்கேற்ப முன்னெடுப்பதாகவும் பாரிய மற்றும் நிரந்த திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் குருநகர் கலையரங்கில் எதிர்வரும் 27ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு விசேட திட்டமிடல் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-4)



புன்னாலைக்கட்டுவன் சிவபூதவராயர் இளைஞர் சங்கத்தினரால் புதுவருட தினத்தன்று க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த. உயர்தரத்திற்கு தெரிவான 13 மாணவர்களுக்கு காசோலை வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது... (படங்கள்:- சக்தி)

# அரசிலிருந்து வெளியேறிய 16 பேரும் மகாநாயக்கர்களை சந்திக்கத் தீர்மானம்

## முன்னாள் அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 16 உறுப்பினர்களும் கண்டிக்குச் சென்று பௌத்த மகாநாயக்க தேரர்களை சந்திக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலாவின் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகாநாயக்க தேரர்களை சந்தித்ததன் பின்னர் கட்சி தலைவர்கள் மற்றும் பல்வேறு குழுக்களை சந்தித்து எதிர்கால நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு நாம் இந்த அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள், ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகள் மற்றும் மக்களுக்கு வரும் அழுத்தங்கள் தொடர்பில் மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய செயற்பாடுகள் என்ன என்பது தொடர்பில் கலந்துரையாடினோம்" என தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 23 ஆம் திகதியின் பின்னர் தமதுவேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்தார். (இ-7)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு: 021 221 7603, 021 567 1532



## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப் பாக விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் வெற்றிடங்கள் உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.

Manager-40,000/- வரை
Bill Clark-25,000- வரை
Store Keeper-25,000/- வரை
Accountant-30,000/- வரை
உதவியாளர்கள்-20,000/- வரை
உதவி Technicians-25,000/- வரை

தங்குமிடம் உணவு வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 077 771 0785

Satstech Engineers Pvt (Ltd) Colombo-13



## வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் கடைகள் வாடகைக்கு உண்டு.

(3667)

தொடர்பு: 021 222 8875



## மேலாளர் / எக்கவுண்டன் தேவை

யாழில் இயங்கிவரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக செயற்படக் கூடிய கணனி அறிவுள்ள பெண் அல்லது ஓய்வு பெற்ற ஆண் ஒருவர் தேவை. பொறுப்பாக செயற்படக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்பு: 077 771 0785



இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**கடன் தொடர்பு இல. 77608724, 77608818 மற்றும் 77696682**

**சுழிபுரம், தொல்புரம் என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.சண்முகசுந்தரம்பிள்ளை கஜமுகன் மற்றும் திருமதி சண்முகசுந்தரம்பிள்ளை பத்மாதேவி ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **30.11.2017ஆம் திகதி 2048ஆம் இலக்க வர்த்தமானியிலும் 20.11.2017ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும்** வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் **இல.692, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் **திரு.கா.பொ.பாலகிருஸ்ணன் 05.05.2018ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு** அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை ஆதனத்தின் விபரம்**

**1.**வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வட்டுக்கோட்டை பகுதியில் வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் பண்ணாகம் J/175ஆம் இலக்க, கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டுக்கோட்டை கிழக்கில் அமைந்த **"இத்திப்புலோ"** என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.ராமசந்திரன் தயாரித்த 01.12.2012 திகதியிட்ட வரைபடம் இல.5188ல் விபரித்த **துண்டு 2** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு **கிழக்கில்** சண்முகசுந்தரம்பிள்ளையின் கைம்பெண் பத்மாதேவி மற்றும் சண்முகசுந்தரம்பிள்ளை கஜமுகன் ஆகியோரின் சொத்தும், **வடக்கு மற்றும் மேற்கில்** குமாரமூர்த்தி விஜயகுமார் மற்றும் மனைவி தமிழினியின் சொத்தும், **தெற்கில்** யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5188ன் பிரகாரம் 4 லாச்சம் VC மற்றும் 14.52 குழிகளும் விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன், **மேற்கில்** அமைந்துள்ள கிணற்றின் மீதான பங்கும் வரைபடம் இல.3815ல் துண்டு 5 என அடையாளமிட்ட பாதை ஊடாக கிணற்றுக்கான வழி உரிமையும் நீர்ப்பாய்ச்சல் உரிமையும் ஆகும். இக்காணி யாழ்ப்பாண காணிப் பதிவகத்தில் S17/131ல் பதிவு செய்யப்பட்டது.

**2.**வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வட்டுக்கோட்டை பகுதியில், வலிகாமம் மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பகுதியில் வலிகாமம் மேற்கில், பண்ணாகம் J/175 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டுக்கோட்டை கிழக்கில் அமைந்த **"இத்திப்புலோ"** என அழைக்கப்படும் காணி, உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.ராமசந்திரன் தயாரித்த 01.12.2012 திகதியிட்ட வரைபடம் இல.5188ல் விபரித்த **துண்டு 3** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு **கிழக்கில்** ராமநாதனின் மனைவி சாந்தினியின் சொத்தும், **வடக்கில்** குமாரமூர்த்தி விஜயகுமாரின் மனைவி தமிழினியின் சொத்தும், மேற்கில் வரைபடம் இல.5188ல் துண்டு 2 என அடையாளமிட்டு ராமநாதன் மால்முருகனின் சொத்தும், **தெற்கில்** காரைநகர் யாழ்ப்பாணம் பிரதான வீதியும் (R.D.A.) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.5188ன் படி 8 லாச்சங்கள் VC மற்றும் 7.41 குழிகள் அளவைக் கொண்டதும் அங்கு அமைந்துள்ள வீடு, கிணறு, கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி (யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் S14/132ல் பதிவுசெய்யப்பட்டது)

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**

இலங்கை வங்கி
யாழ்ப்பாணம் இரண்டாவது மேற்தரக்கிளை
திகதி: 28.02.2018

திரு.ஞா.பரதன்
கிளை முகாமையாளர்.



## கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L,வியாபாரம்
தொ.இ: B/8483

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:10ம் தரம்/சொந்த தொழில்
தொ.இ: B/8486

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 40 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:B.A /ஆசிரியர்
தொ.இ: B/8487

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 22 செவ் 2 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:Diploma/அரசதொழில்
தொ.இ: B/8488

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: சூரி செவ் 8இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, தனியார் தொழில்
தொ.இ: G/7629

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 49 செவ் 7இல்
உயரம்: 151cm
தகைமை/தொழில்: HNDA/அரச தொழில்
தொ.இ: G/7633

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.Sc/ஆசிரியர்
தொ.இ: G/7635

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: சூரி செவ் 4இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் அழகுக்கலை நிபுணர்
தொ.இ: G/7638

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## வாழ்வுரிமை, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தி

# தமிழ்த் தேசிய மே நாள் இம்முறை முழங்காவிலில்

(பனிக்கன்குளம்)

இரணைதீவு மக்களின் வாழ்வுரிமை, தொழிலுரிமையை வலியுறுத்தியும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தேசிய மே-நாள் நிகழ்வுகள் எழுச்சியாக இம்முறை முழங்காவிலில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசிய மே-நாள் நிகழ்வுகள் இம்முறை முழங்காவில் விநாயகர்விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் தேசிய மே-நாள் நிகழ்வுகள் எதிர்வரும் மே-1 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நாச்சிக்குடாச் சந்தியில் இருந்து ஊர்தி பவனிகளுடன் ஆரம்பமாகி எழுச்சிப் பேரணி பிரதான வீதி வழியாக நகர்ந்து முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்து அங்கு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மாபெரும் மேதினக் கூட்டம் இடம்பெறவுள்ளது.இக்கூட்டத்தில்தொழிற் சங்கப் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரது சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த நிலையில் 28 வருடங்களாக தமது சொந்த இடத்திற்குப் போவதற்காகக் காத்திருந்து தற்போது போராடி வரும் மக்களது வாழ்வு ரிமை, தொழிலுரிமையை வலியுறுத்தியும், தமது உறவுகளை தமது கண்முன்னே இலங்கை இராணுவமும் அதனது துணைப்படைகளும் பிடித்துச் சென்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை அரசு விடுவித்து ஒரு வருடத்திற்கும் மேலாக வீதிகளில் இரவு பகலாகப் போராடி வரும் அவர்களது உறவுகளுக்கு நீதியை வலியுறுத்தியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான தமிழ் தேசிய மே-நாள் நிகழ்வுகள் எழுச்சியாக முழங்காவிலில் இம்முறை இடம் பெறவுள்ளன.





தமிழ் தேசிய மே-நாள் நிகழ்வுகள் தொடர்பான முன்னாயத்த ஏற்பாட்டுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் காரியாலயமான அறிவகத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது.

இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் பிரதேச, வட்டார அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுதமிழ்த் தேசிய மே-நாள் நிகழ்வுகளை சிறப்புற எழுச்சியாக நடத்துவது தொடர்பான ஆக்கபூர்வமான தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.அத்துடன் முழங்காவில் பிரதேச அமைப்பாளர் யோ.தனராஜ் தலைமையிலான மே-நாள் ஏற்பாட்டுக் குழுவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-281)

## நடமாடும் சிற்றுண்டி விற்பனை நிலையம் சுற்றிவளைப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள நடமாடும் சிற்றுண்டி விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் வவுனியா சுகாதார பிரிவினர் சுற்றுவளைத்து முற்றுகையிட்டனர்.

வவுனியா குருமன்காட்டு சந்திக்கு அருகே காணப்படும் நடமாடும் சிற்றுண்டி விற்பனை நிலையத்தில் உணவுகள் சீர்கேடான முறையில் விற்பனை செய்வதாக வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை திடீர் சோதனையில் சுகாதார பிரிவினர் ஈடுபட்டனர்.

இதன்போது அந் நடமாடும் விற்பனை நிலையத்தில் சுகாதார சீர்கேடான முறையில் தயாரிக்கப்பட்ட வடை, ரோல் என்பன காணப்பட்டதுடன் குறித்த விற்பனை நிலையத்தின் பணியாளரிடம் மருத்துவ சான்றிதழ் காணப்படவில்லையெனவும் பொது இடத்தில் வைத்து உணவு தயார் செய்தல் போன்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து குறித்த நிலையத்தின் உணவு பொருட்களை சுகாதார பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் மேலும் வவுனியா நகரில் உள்ள வியாபார நிலையங்களில் தொடர்ச்சியாக இவ்வாறான திடீர் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் சுகாதார பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

## கரைதுறைப்பற்று பிரதேசசபையின் கன்னி அமர்வு; அபிவிருத்தி கருதி நான்கு குழுக்கள் தெரிவாகின

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கன்னி அமர்வு தவிசாளர் க.தவராசா தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் தவிசாளர் தலைமை உரையைத் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர்களின்



கன்னி உரை இடம்பெற்றது.

இதில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் காட்டு மரங்கள் அழிக்கப்படுவதை நிறுத்த வேண்டும்.வாராந்த சந்தை செயற்படுத்துவது தொடர்பிலும்,பிரதேசத்தின் வீதிகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்டது. அத்துடன் தண்ணீரூற்று சந்தைக்கான கடைத்தொகுதி நிர்மாணிக்க வேண்டும் எனவும் விவாதிக்கப்பட்டது.

முள்ளியவளை சந்தையில் உள்ள கடைத்தொகுதி குத்தகைக்கு விடுதல்,பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனையை குறைத்தல் ,பெண் தலைமைத்துவ குடும்பங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்ட நிலையில். தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் உறுப்பினர் த.அமலனால் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 406 ஆவது நாளாக போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களின் போராட்டத்திற்கு பிரதேச சபையினரால் தண்ணீர் உள்ளிட்ட உதவிகளை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை பிரதேச சபையினால் மத்திய அரசிற்கு எவ்வாறான அழுத்தங்களை கொடுக்கலாம் என்றும் முன்வைக்கப்பட்டு தனது கன்னியுரையுடன் குறித்த பிரேரணையை முன்வைத்து உரை நிகழ்த்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் பிரதேசத்தில் காணப்படும் வீதிகளுக்கு பழைய பெயர்களை சூட்ட வேண்டும் என்று தனது கருத்தை முன்வைத்தார்.

இதன் பின்னர் பிரதேசத்தின் அபிவிருத்தி கருதி நான்கு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஆளும் கட்சியான கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்த உறுப்பினர்களை கொண்டே அபிவிருத்திக்கான நான்கு குழுவிலும் தெரிவு செய்யபபடாமல் தவிசாளரினால்பெயர் விபரம் வாசிக்கப்பட்டுள்ளது இதனை அமர்வில் உறுப்பினர்கள் முன்னிலையில் அனைத்து கட்சி உறுப்பினர்களையும் உள்ளடக்கியே தெரிவு செய்யப்படவேண்டும் என்று ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் இதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

தவிசாளரினால் தெரிவு செய்து வாசிக்கப்பட்ட குழுவிற்கே கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால் சுயேட்சை குழுவினை சேர்ந்த யோ.அமலதாஸ் அபிவிருத்திக்கான நிதிக்குழுவில் உள்வாங்கப்பட்டார். இதன்போது முக்கிய குழுக்களில் கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்த கட்சியின் உறுப்பினர்களே உள்வாங்கப்பட்டுள்ளதாக ஏனைய உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள். குறிப்பாக தவிசாளர் தெரிவின் போது நடுநிலைமையாக நின்றவர்களும் எதிர்த்து வாக்களித்தவர்களும் உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-281-315)

## தட்டுவன்கொட்டி குடிநீர் விநியோக வேலைத்திட்டங்கள் 60 வீதம் பூர்த்தி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தட்டுவன்கொட்டி பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திற்கான வேலைத்திட்டங்கள் 60வீத முன்னேற்றம் அடைந்திருப்பதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தட்டுவன்கொட்டி பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்தை நிரந்தரமாக மேற்கொள்ளும் பொருட்டு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் 76 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் விநியோகத்திற்கான குழாய்கள் பொருத்துகின்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் ஆனையிறவு, உமையாள்புரம், தட்டுவன்கொட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்டோர் தமக்கான குடிநீரைப்பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதற்கான வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதில் 60 வீத வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்றிருப்பதாகவும் மேற்படி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## குடிநீரின்றி கால்நடைகள் அவதி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிலவுகின்ற வறட்சி காரணமாக கால்நடைகளுக்கான குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதுடன், கால்நடைகள் நீர் தேடி அலைகின்ற நிலைமை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக நிலவி வரும் கடுமையான வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குறிப்பாக, பல்வேறு பிரதேசங்களிலும் காணப்பட்ட நீர்நிலைகள், குளங்கள் என்பவற்றில் நீர் வற்றிக் காணப்படுவதனால் கால்நடைகள் மற்றும் ஏனைய விலங்குகள் குடிநீர் தேடி அலைகின்ற நிலைமை காணப்படுகின்றது.

தற்போது கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் ஊரியான், தட்டுவன்கொட்டி, புளியம்பொக்கணை, தருமபுரம் ஆகிய பகுதிகளில் கால்நடைகளுக்கான குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் கால்நடைகள் நீர் தேடி அலையும் நிலை காணப்படுகின்றது. (2-315)

# பாலியல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் 5 வருடங்களின் பின் கைது

## 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவு

(மன்னார்)

மன்னாரில் பாலியல் குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகியிருந்த நிலையில் கடந்த 5 வருடங்களின் பின்னர் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செட்டிகுளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பாலியல் துஷ்பிரயோக சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களினால் அன்றையதினம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் பெண்கள்,சிறுவர் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது சந்தேக நபரைக் கைது செய்ய மன்னார் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில் குறித்த நபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் குறித்த சந்தேக நபரை கைது செய்ய மன்னார் மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

பணிப்புரைக்கு அமைவாக மன்னார் மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.முனசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்த துரித நடவடிக்கையின் காரணமாக குறித்த நபர் 5 வருடங்களின் பின்னர் தலைமறைவாகியிருந்த நிலையில் செட்டிகுளம் பகுதியில் வைத்து கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைத்து வரப்பட்டார்.

கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை விசாரணைக்கு உட்படுத்திய நிலையில் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (2-4-281)

# கிளிநொச்சி,வவுனியாவில் அம்மாச்சி உணவகங்கள்

(வவுனியா)

நவீன வசதிகளுடன் கூடிய புதிய இரண்டு அம்மாச்சி உணவகங்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல், விவசாய மற்றும் தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த சுமார் 1200 மாணவர்கள் பயனடையக் கூடிய வகையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக சுமார் 1000 மாணவர்களும் மற்றும் அப்பிரதேசத்தின் பொதுமக்களும் பயன் அடையக் கூடிய வகையில் வவுனியா பம்பைமடு வவுனியா -மன்னார் பிரதான வீதியில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு அம்மாச்சி உணவகங்களை நிர்மாணிப்பதற்குரிய 25 மில்லியன் ரூபா நிதியினை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்விரு பாரம்பரிய உணவகங்களை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

பல்கலைக்கழகங்களில் நிறுவப்படும் இந்த அம்மாச்சி உணவகங்களின் மூலம் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்து கல்வி கற்கும் மூவின மாணவர்களும் தரமானதும் போசனை மிகுந்ததுமான உணவுகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வழிவகுப்பதுடன் உணவுத் தேவைக்காக பல்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை மாறி மாணவர்கள் அனைவரும் ஓரிடத்தில் உணவைப் பெற்றுக் கொள்வதுடன் ஒன்றாக இருந்து உணவருந்துவதன் மூலம் மாணவர்களுக்கிடையே நல்லுறவுகளையும் வளர்க்க இவை துணை செய்யும் என நம்பப்படுகின்றது என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (2)

# கிளிநொச்சி பொதுச்சந்தையில் கட்டாக்காலி மாடுகளால் தொல்லை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான கிளிநொச்சி பொதுச் சந்தையில் கட்டாக்காலி மாடுகளால் வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைவதாக வர்த்தகர்கள் சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வியாபாரிகள், பொதுமக்கள், வர்த்தகர்கள் கருத்துத் தெரிவிக்கையில் நாளாந்தம் கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் சந்தை வளாகத்துக்குள் நுழைந்து மரக்கறி கடை தொகுதியில் வைக்கப்பட்டுள்ள மரக்கறி வகைகள், பழக் கடைகளில் வைக்கப்பட்டுள்ள பழ வகைகள் ஆகியவற்றை உண்பதுடன், நாளாந்தம் மக்களால் தமது தேவைக்காக மரக்கறி வகைகள் பழ வகைகள ஆகியவற்றை வாங்கித் தம் சைக்கிள், மோட்டார் வண்டிகளில் வைத்து விட்டு வேறு பொருட்களை வாங்கச் செல்லும் போது அப்பொருட்களை அவை சேதப்படுத்துகின்றன. இக்கட்டாக்காலி மாடுகள் சந்தை வளாகத்தினுள் வர விடாது தடுத்து நிறுத்துமாறு கரைச்சிப் பிரதேச சபையினரை பொது மக்கள், வியாபாரிகள், வர்த்தகர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர். (2-271)

# வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய 'நல்லுறவு சமாதானப் பயணம்'

## வவுனியாவில் இருந்து நேற்று ஆரம்பம்

(மல்லாவி)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தராவின் திட்டத்திற்கு அமைவாக வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஏற்பாட்டிலும் இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமை நல்லுறவு, நம்பிக்கையுடனான நல்லிணக்கம் என்பவற்றை வலுப்படுத்தும் வகையிலும் வவுனியா மற்றும் மன்னார் பொலிஸ் பிராந்தியங்களில் உள்ள 22 பொலிஸ் நிலையங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு பொது அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 44 உறுப்பினர்களுடன் தெற்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் உட்பட மேல் மாகாணங்களுக்கு வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய "நல்லுறவு சமாதானப் பயணம்" நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா-மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

இந்த நட்புறவுச் சுற்றுலா பயணத்தை மேற்கொண்டுள்ள வடக்கு உறவுகளை தெற்கு, ஊவா, மத்திய மாகாணங்களைச் சேர்ந்த பிரதேச மக்கள் வரவேற்று உபசரிப்பதுடன், நினைவுப் பரிசில்களையும் வழங்கி வைக்கவுள்ளனர்.

இதனையடுத்து, கதிர்காமம் மற்றும் கிரிவிகாரை, கதிரமலை, செல்லக் கதிர்காமம், உள்ளிட்ட மதத் தலங்களுக்குச் சென்று இறைவழிபாடுகளில் ஈடுபடுவதுடன், காலி பிரதேசத்தில் நடைபெறவுள்ள புதுவருட நிகழ்வுகளிலும் மற்றும் அம்புள்ள பிரதேசத்தில் நடைபெறும் கலாசார நிகழ்விலும், மகியங்கனை மற்றும் தம்பனை பிரதேசங்களில் ஆதிவாசி மக்களுடனான சந்திப்புகளிலும் பங்கு கொள்ளும் வகையில் பயண ஒழுங்கமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-281)

# விருந்தோம்பல் முகாமைத்துவ துறையில் தொழிற்பயிற்சியும் வேலை வாய்ப்பும்

வட மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள இளையோர்களுக்கு விருந்தோம்பல் முகாமைத்துவ துறையில் வேலைவாய்ப்பொன்றினை வழங்கும் பொருட்டு அபிவிருத்திக்கான இலங்கை ஜேர்மன் கூட்டிணைவானது (Deutsche Gesellschaft Fur Internationale Zusammennarbeit ( GIZ) ஜெற்விங் ஹோட்டல்ஸ் (Jetwing Hotels) நிறுவனத்துடன் இணைந்து விருந்தோம்பல் முகாமைத்துவ துறையில் தொழிற்பயிற்சி ஒன்றை வழங்குவதற்காக ஆர்வமுள்ள இளையோரை இணைத்துக் கொள்வதற்காக விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டல் நிகழ்வுகள்ளை நடத்தி வருகின்றது. இது பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள 021 492 7025 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். மேலும் இன்று கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலய மைதானம், நாளை புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் முன்றல், நாளை மறுதினம் முல்லைத்தீவு செயலகத்திற்கு முன்னால் உள்ள மைதானம், எதிர்வரும் 23 ஆம் திகதி மல்லாவி யோகபுரம் மத்திய மைதானம், எதிர்வரும் 24 ஆம் திகதி இரணை இலுப்பைக்குளம் மைதானம், எதிர்வரும் 25 ஆம் திகதி St.Mariyagotti மைதானம் (பண்டிவிரிச்சான்), எதிர்வரும் 26 ஆம் திகதி மன்னார் UC-stadioum மைதானம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ள விழிப்புணர்வு நிகழ்வுகளில் நேரடியாகப் பங்குபற்றி பயிற்சிக்காக விண்ணப்பித்துக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# காணாமல்போன 8 பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

## மன்னாரில் சம்பவம்



(மல்லாவி)

மன்னார் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள மன்னார் தோட்டவெளி ஜோசப் வாஸ் நகர் கிராமத்தில் இருந்து கடந்த மாதம் 26 ஆம் திகதி நண்பகல் முதல் காணாமல் போயிருந்ததாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் மனைவியினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த 8 பிள்ளைகளின் தந்தையான அல்பேட் என்று அழைக்கப்படும் மனுவேல் பிள்ளை வயது- 71 என்பவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள ஓலைத்தொடுவாய். உவரி காட்டுப்பகுதியில் இருந்து சிதைவடைந்த நிலையில் சடலமொன்று காணப்படுவதாக மன்னார் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை மேற்கொண்ட போதே குறித்த சடலம் காணாமல்போன 8 பிள்ளைகளின் தந்தையான மனுவேல் பிள்ளை என்பவருடையது என்பது தெரியவந்தது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்ததுடன், இவரது மரணம் தற்கொலையா? அல்லது கொலையா? என்ற பல்வேறு கோணங்களில் பல விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15-281)




# இவ்வாண்டு 12 ஆயிரம் நாய்களுக்கு தடுப்பூசி,கருத்தடை சிகிச்சை வழங்கல்

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத் தகவல்படி

(கண்டாவளை)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் இவ்வாண்டு பன்னிரண்டாயிரம் நாய்களுக்கு தடுப்பூசி மற்றும் கருத்தடை சிகிச்சை என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் பல்வேறு பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவற்றைக்கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மேற்படி திணைக்களம் கடந்த வருடம் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சில சட்ட விடயங்கள் உள்ளூராட்சி சபைகளிலும் அவற்றுக்கான தடுப்பூசிகளும் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளும் சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த வருடம் அமைச்சரவை முடிவின்படி மேற்படி செயற்பாடுகள் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் நாய்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றுகின்ற நடவடிக்கையை முழுமூச்சாக மேற்படி திணைக்களம் பொறுப்பேற்றுக் கொண்டு முதற்கட்டமாக சாவகச்சேரி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஆயிரத்து ஐந்நூறு நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு கருத்தடை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அடுத்துவரும் பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் கட்டாக்காலி நாய்களின் தொல்லை இருக்காது என்றும் நாய்களை பணத்திற்கு வாங்குகின்ற ஓர் நிலைமை ஏற்படும் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்கப்படாத ஏனைய தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்



## டக்ளஸ் தேவானந்தா உறுதியளிப்பு

(கொழும்பு)

தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பிலான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ள நிலையில் குறித்த நேர்முகத் தேர்வில் இணைத்துக் கொள்ளப்படாத எஞ்சியுள்ள தொண்டராசிரியர்கள் தமக்கான நியமனங்களையும் உறுதி செய்து தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த சந்திப்பின் போதே பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் ஒரு தொகுதியினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# முதியோர் சங்க ஒன்றுகூடல்


(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் நிகழ்வும் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகளும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சங்க மண்ட பத்தில் இடம்பெறும்.

இதில் கைதடி அரச முதியோர் இல்ல மூத்தப்பிரஜைகள் பங்கு பற்றி நிகழ்வை சிறப்பிப்பர். (இ)

# மருதனார்மடத்தில் சிறுவர் களியாட்ட நிகழ்ச்சி





(சுன்னாகம்)

மருதனார்மடம் பகுதியில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட களியாட்ட அரங்கினை (கானிவல்) வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையின் அனுமதியுடன் தனியார் நிறுவனம் ஒன்றினால் மருதனார்மடம் பகுதியில் சிறுவர்களுக்காக களியாட்ட அரங்கு (கானிவல்) அமைக்கப்பட்டுள்ளது.


இந்நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வலி. தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

தவிசாளருடன் வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை உறுப்பினர் திருமுருகராஜன் மற்றும் பிரதேச மக்கள், சிறுவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டார்.

மேற்படி அரங்கில் செயற்கை நீச்சல்குளம், சிறுவர் விளையாட்டுத்திடல்கள், உணவகங்கள், பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் சாகசம் எனப்பல அரங்குகள் அமைந்துள்ளன. (இ-7)

# இந்தியக் கடற்படையின் துணைத்தளபதி இலங்கையில்



(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் அஜித் குமார் இலங்கைக்கு நான்கு நாட்கள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

வைஸ் அட்மிரல் அஜித் குமாருக்கு நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்தும், மூலோபாய கடற்படை ஒத்துழைப்புக் குறித்தும் இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியக் கடற்படைத் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் அஜித் குமார் இன்று தமது இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பவுள்ளார். (இ-7)

# இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சிகள் வழங்கப்படும்

## ஸ்கொட்லாந்து பொலிஸார் தகவல்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் பயிற்சிகள் வழங்கப்படும் என்று, ஸ்கொட்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



2017ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில், இலங்கையின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஸ்கொட்லாந்து பொலிஸ் குழு பயிற்சிகளை வழங்கி வருகிறது.

ஆனால் இலங்கையின் பொலிஸார் மீது துன்புறுத்தல்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் இருக்கின்ற நிலையில், அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இது தொடர்பில் ஸ்கொட்லாந்தின் தகவல் அறியும் சட்டத்துக்கு அமைய, தஃ பெரட் என்ற ஊடகம், ஸ்கொட்லாந்து பொலிஸ் தலைமை கண்காணிப்பாளரிடம் விபரம் கோரியுள்ளது.

இதன்படி வழங்கப்பட்டுள்ள விளக்கத்தில், இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த பயிற்சி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மே 7ஆம் திகதி முதல் கடமை நேரத்துக்கு மட்டுமே பணியாற்றும் போராட்டம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் நிர்மாணிப்பின் பின்னர் ஏனைய அனல்மின் நிலையங்கள் புனர்நிர்மாணம் செய்யாமையின் காரணமாக மின்சார பாவனையின் விலைச் சுட்டிகள் அதிகரிக்கப்பட்டதால் பொதுமக்களின் வாழ்க்கை செலவுகளில் தாக்கம் செலுத்தப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற விதமாக செயற்படுவதன் காரணமாக இதனை கண்டித்து எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு பின்னர் நிர்ணயிக்கப்பட்ட கடமை நேரத்திற்கு அமைய தொழிற்சங்க போராட்டத்தினை முன்னெடுக்கப் போவதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமி குமாரவடு தெரிவித்தார்.

மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 300 மெகாவோட்டினால் மின்சாரம் அதிகரிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியாக மின் தட்டுப்பாடு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே நீண்டகால தேவைகளை கருத்திற் கொண்டு இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் உருவாக்கிய திட்டங்களை பொது பயன்பாட்டு ஆணைக்குழு பொருத்தமற்ற விதத்தில் நிராகரித்துள்ளமை முறையற்றதாகவே காணப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு மின்சார பாவனையின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு மானிய முறையில் காணப்பட்டது. ஆனால் 2016இல் 18 ரூபாவிலும் 2017ஆம் ஆண்டு 21ரூபாவிலும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. இவ்வாறு மின்சார கட்டணம் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கு தேசிய அரசாங்கமும் பொதுபயன்பாட்டு ஆணைக்குழு மாத்திரமே பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினை பெற்றுக் கொள்ளும் தீர்வு திட்டங்களை மின்சார சபை பொறியியலாளர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்திடம் முன்னிலைப்படுத்தி வந்தனர். ஆனால் அரசாங்கம் வாக்குறுதிகளை மாத்திரமே வழங்கி வருகின்றதே தவிர அதனை நிறைவேற்றவில்லை.

20 வருட தேவைகளை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க அனுமதி வழங்கி, அதற்கான நிலப்பரப்பினையும் ஒதுக்கி, துரிதமாக அனல் மின்நிலையங்களை உருவாக்க வேண்டும்.

குறைவான மின்சார கட்டணங்களை ஏற்படுத்தக் கூடிய அனல்மின் நிலையங்களை உருவாக்கி, நீண்டகால தேவைகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்க வேண்டும்.

தற்போது நடைமுறையிலுள்ள 2009ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மின்சார பாவனை சட்டங்களை பயன்படுத்தி விரைவான மாற்றங்களை உருவாக்கி பயன்பாடற்ற விதத்தில் காணப்படும் அனல்மின் நிலையங்களை மீள்திருத்தங்களை மேற்கொள்வதுடன் சம்பூர் அனல்மின் நிலைய நிர்மாணப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கைகளை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முன்வைத்தோம்.

ஆனால் இதுவரை காலமும் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை,

அரசாங்கத்தின் பொறுப்பற்ற விடயத்தினை கண்டித்து நாளை தொடக்கம் தொழிற்சங்க போராட்டத்தினை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் எதிர்வரும் வெசாக் பண்டிகைக்கு இந்த போராட்டம் தாக்கத்தினை ஏற்படுத்தும் என பௌத்தமத குருமார்கள் வேண்டுகோள் விடுத்தமையின் காரணமாக போராட்டம் அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு பின்னர் முன்னெடுப்பதில் எவ்வித மாற்றங்களும் கிடையாது. ஆகவே தற்போதுள்ள கால அவகாசத்தில் அரசாங்கம் விரைவான தீர்வினைப் பெறும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (இ-7)

# அழிவுப் பாதையில் செல்வதால் நல்லாட்சி அரசாங்கத்தால் நன்மை ஏற்படவில்லை

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்




(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தால் மக்களுக்கு எவ்வித நன்மைகளும்ஏற்படவில்லை என முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தொட்டலங்க பகுதியில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

எனக்கு அமைச்சுப் பதவியொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி மறுக்கவில்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது நோக்கமாக அமைந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் அழிவுப்பாதையில் செல்வதுடன் நாட்டை நகைப்பிற்குரியதாக மாற்றியுள்ளது.

நான் அமைச்சராக இருந்த காலத்தில் எரிவாயு உள்ளிட்ட பொருட்களின் விலைகளை குறைத்திருந்தேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பதவியேற்பு நிகழ்வுகளுக்கு பொதுமக்களின் பணத்தை பயன்படுத்த வேண்டாம் - மகிந்த



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மேயர்கள், நகர பிதாக்கள், பிரதேச சபை தவிசாளர்கள் தங்களது கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வுக்கு பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தின் சில மாநகர, நகர, பிரதேச சபைகளின் தலைவர்கள் கடமைகளை பொறுப்பேற்கும் போது பொதுமக்களின் பாரிய தொகை பணத்தினைப் பயன்படுத்தியுள்ளதாக தனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் இது மிகப்பெரும் குற்றமாகும் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஏழை மக்களின் வரி அறவீடுகள் மூலம் முன்னெடுக்கப்படும் நகர, பிரதேச சபைகளின் நிதியங்கள் பொது மக்களின் தேவைக்கு வழங்கப்பட வேண்டிய நிலையில் தற்போதைய அரசினால் முன்னெடுக்கப்படும் சில வைபவங்களுக்கு அந்த பணங்கள் பயன்படுத்தப்படுவதை தம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த வைபவங்களுக்கு இவ்வாறு பணத்தை செலவிடுமாறு நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர சபை அதிகாரிகளுக்கு வலியுறுத்த முடியாது எனவும் மிகவும் இலகுவான முறையில் எளிமையாக குறித்த நிகழ்வுகளை நடத்துமாறு நகர, பிரதேச சபைகளிடம் வேண்டிக் கொள்வதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை - டொமினிக்கா இராஜதந்திர தொடர்புகளை மேற்கொள்ளத் தீர்மானம்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் பொதுநலவாய அமைப்பிற்கு உட்பட்ட நாடான டொமினிக்காவுடன் இராஜதந்திர தொடர்புகளை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலங்கைக்கான தூதுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியுமான டாக்டர் அமிரித் றொகான் பெரேரா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் டொமினிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியும் இது தொடர்பிலான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந் நிகழ்வு நியூயோர்க்கில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. (இ-7)

# பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் அன்னை பூபதிக்கு நேற்று அஞ்சலி!





(ஏறாவூர்)

தேசத்தின் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 30 ஆம் ஆண்டு நினைவுதினம், பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் நேற்று வியாழக் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நாவலடியில் அமைக்கப்பட்டுள்ள அன்னை பூபதியின் நினைவுத் தூபிக்கு அருகே குறித்த அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

அன்னை பூபதியின் பிள்ளைகளின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றிருந்த நிலையில், அன்னை பூபதியின் சகோதரி கண்ணமுத்து பிள்ளையம்மா, அன்னையின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து பொதுச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து அவரின் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டு. இணைப்பாளர் த.சுரேஸ், மட்டு. மாநகர சபை மேஜர் சரவணபவன், ஐக்கிய தேசிய கட்சியின் மட்டு. மாவட்ட இணைப்பாளர் வே.மகேஸ்வரன், அரசியல் கட்சியினர்கள், பொதுமக்கள் என பலரும் மலர்மாலை அணிவித்து பொதுச்சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (இ-7)

# 35 வருடங்களின் பின்னர் நாடாளுமன்றம் புனரமைப்பு



(கொழும்பு)

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியானது 35 வருடங்களுக்குப் பின்னர் ஒரு பில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு செலவாகும் பணத்தை கோரும் குறிப்பாணை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற பொதுச்செயலாளர் நாயகம் தம்மிக திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் கூரை, வாயிற் கதவுகள், மலசலகூடம்,நாடாளுமன்ற சபை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் என்பன புனரமைப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)








பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிற்பகல் லண்டன் நகரில் உள்ள ஸ்ரீ சத்தாதிஸ்ஸ பௌத்த மத்திய நிலையத்திற்கு சென்று விகாராதிபதி சங்கைக்குரிய கலயாயே பியதஸ்சி நாயக்க தேரரை சந்தித்தார். விகாரையில் சமயக் கிரியைகளில் ஈடுபட்ட ஜனாதிபதி மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசீர்வாதங்களை வழங்கினர்.

# பாரதம்

## எச்.ஐ.விக்கு விரைவில் தடுப்பூசி இறுதிக்கட்டத்தில் விஞ்ஞானிகள்



(லண்டன்)

ஒரு புதிய ஆய்வின் மூலம் எச்.ஐ.வி நோய்த்தொற்றிற்கு ஒரு நீண்ட கால தடுப்பூசி கண்டு பிடிக்கும் முயற்சியின் இறுதி கட்டத்தில் விஞ்ஞானிகள் உள்ளனர்.

ஒரு ஊசி சோதனைக்கு பயன்படுத்தப்பட்ட குரங்கை எச்.ஐ.வி நோய்க்கிருமியில் இருந்து 18 வாரங்கள் பாது காக்கிறது.

இது நோய்த்தொற்றுக்கு பல மாதங்கள் மனிதர்களுக்கு தடுப்பூசி வழங்க முடியும் எனக் கூறலாம், என ராக்பெல்லர் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு கூறுகிறது. பாலியல் முன் தடுப்பு மருந்து ப்ரெப் எடுக்கலாம். இருப்பினும் நீண்ட கால பயனுள்ள தடுப்பூசி இல்லை என இயற்கை மருத்துவம் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த தடுப்பூசி கண்டு பிடிப்புக்கு உரிய அடிப்படை பணிகள் தொடங்கி விட்டன. ஆனால் இந்த தடுப்பூசி வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே வழங்க முடியும். அது எப்போது கிடைக்கும் என்பது தெளிவாகவில்லை.

தற்போது, எச்.ஐ.விக்கு எந்தவிதமான சிகிச்சையும் இல்லை, வாழ்நாள் முழுவதும் ஆன்டிவைரல் சிகிச்சை நோய்த்தாக்குதலை கட்டுப்படுத்துகிறது.

ஆனால் பெரும்பாலும் குமட்டல், வாந்தி மற்றும் தூக்கமின்மை போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது.

ஐரோப்பாவில் எச்.ஐ.வி. விகிதங்கள் உயர்ந்த போதிலும், கடந்த ஜூலையில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் அடிப்படையில் எய்ட்ஸ் தொடர்பான நோயாளிகள் 10 ஆண்டுகளில் பாதியாக குறைந்துள்ளனர்.

எச்.ஐ.வி நோய்த் தொற்றின் பிற்பகுதியில் ஏற்படும் எய்ட்ஸ் ஒரு நோய்க்குறி ஆகும். (7)

## மேற்கு வங்காளத்தி

### 15 பேர் உயிரிழப்பு



(கொல்கத்தா)

மேற்கு வங்காள மாநிலத்தில் மணிக்கு 98 கிலோ மீற்றர் முதல் 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசியசூறாவளி காற்றில் சிக்கி 15 பேர் பலியாகி உள்ளனர்.

மேற்கு வங்காள மாநிலத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் சூறாவளி காற்று வீசியது.

மணிக்கு 98 கிலோ மீற்றர் முதல் 100 கிலோ மீற்றர் வேகத்தில் 45 நிமிட நேரம் இந்த சூறாவளி காற்று நீடித்தது.


சூறாவளியில் கட்டடம் இடிந்து விழுந்தது. 200 மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

கொல்கத்தாவில் 7 பேரும், ஹௌரா மாவட்டத்தில் 6 பேரும், பாங்குரா மற்றும் ஹூக்ளி மாவட்டங்களில்

## பாதி மனிதன் ; பாதி ம

## வீதியில் விநோத வி

## பொதுமக்கள் அ



(பியூனர்ஸ் எயார்ஸ்)

ஆர்ஜென்டினாவின் சாண்டா பெ நகரின் வீதியில் சுற்றித் திரிந்த விநோத மிருகத்தால் பொது மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

ஆர்ஜென்டினாவின் சாண்டா பெ நகரின் தெருவில் நடந்து செல்லும் ஒரு விசித்திரமான மிருகம் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த விநோத விலங்கு பாதி மனிதனாகவும், பாதி மிருகமாகவும் இருந்துள்ளது. இந்த மிருகம்

## காவிரி நீர் விவகாரம்

### பிரிட்டன் சென்ற இந்திய பிரதமருக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழர்கள் ஆர்ப்பாட்டம்




(லண்டன்)

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததை கண்டித்து பிரதமர் மோடிக்கு எதிராக லண்டனிலும் தமிழர்கள் 'கோ பேக் மோடி' என கோஷங்களை எழுப்பினர்.

தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத, பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடைபெற்று வருகிறது. கடந்த 12 ஆம் திகதி பிரதமர் மோடி தமிழகம் வந்த போதும் போராட்டம் நடைபெற்றது. எதிர்க்கட்சிகள், அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பல தரப்பிலும் கறுப்புக் கொடி காட்டி போராட்டம் நடத்தப்பட்டது. சமூக வலைத்தளங்களிலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. #GoBackModi என்ற ஹேஷ்டேக் உலக அளவில் ட்ரெண்டிங் ஆனது.

இந்நிலையில், கொமன்வெல்த் நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ள பிரதமர் மோடி பிரிட்டன் சென்றுள்ளார். லண்டன் நகரில் ஒன்று கூடிய தமிழர்கள் பிரதமர் மோடிக்கு எதிராக "கோ பேக் மோடி" என கோஷம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (7)

## 10 ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் விழுந்த எரிநட்சத்திரத்தில் வைரக்குவியல்

### பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வில் கண்டுபிடிப்பு



(நியூயோர்க்)

பத்து வருடத்துக்கு முன்பு பூமியில் விழுந்த எரிநட்சத்திரத்தில் வைரக்கற்கள் இருந்ததை சூடான் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் ஒரு எரி நட்சத்திரம் விழுந்தது. விண்வெளியில் நாசா அமைத்துக் கொண்டிருந்த ஆராய்ச்சி மையம் இதை கண்டுபிடித்தது.

அல்மஹாட்டா சிட்டா என அழைக்கப்பட்டது. ஆனால் அந்த நட்சத்திரம் பூமியை நெருங்குவதற்கு சில கி.மீற்றர் தூரத்தில் வெடித்து சிதறியது. பூமிக்குள் நுழைந்த அந்த நட்சத்திரம் சூடானில் இருக்கும் நுபியன் பாலைவனத்தில் பாதி எரிந்த நிலையில் விழுந்தது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இதை சூடானில் இருக்கும் கார்டோம் பல்கலைக்கழக மாணவர்கள் ஆராய்ச்சி செய்தனர். அப்போது ஆல்மஹாட்டா சிட்டா நட்சத்திரத்தின் உடல்பகுதி முழுவதும் சிறு சிறு வைரக்கற்கள் இருந்தன.

இந்த எரிநட்சத்திரம் வெடித்தபோது வைரம் உருவாக வாய்ப்பு இல்லை. அதற்கு முன்பே அதில் வைரம் இருந்திருக்கலாம். எனவே இந்த எரிநட்சத்திரத்தில் வைரக் குவியல் இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது. அவை தூய்மையான வைரக்கற்கள் என்றும் அதற்கு முன்பு இதுபோன்ற வைரத்தை பார்த்ததில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வைரம் பூமி தோன்றும் முன்பே உருவாகி இருக்கலாம். மேலும் நட்சத்திரங்கள் மோதி சூரிய குடும்பம் உருவானபோது ஆல்மஹாட்டா சிட்டா எரிநட்சத்திரமும் உருவாகி இருக்கலாம். சரியாக சொல்ல வேண்டுமானால் பூமி உருவான அதே நாளில் இந்த எரிநட்சத்திரமும் தோன்றியிருக்கலாம் என்றும் மனிதர்கள் எப்படி உருவானார்கள் என்பது கூட இந்த ஆய்வின் மூலம் கண்டறிய முடியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (7)

## சிறுமி ஆஷிபா படுகொலை வழக்கில்

## குற்றவாளிக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும்

### நடிகர் சேதுபதி ஆதங்கம்

(சென்னை)

சிறுமி ஆஷிபா விவகாரத்தில் தவறு செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் அது தகும் என்று நடிகர் விஜய் சேதுபதி ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

திரைப்பட சண்டைக் கலைஞர்கள் சங்கத்தின் 51 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது. இதில் விஜய் சேதுபதி, இயக்குநர் விக்ரமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். விஜய் சேதுபதி இரத்ததானம் செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர்,

பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி கொலை செய்யப்பட்ட ஆஷிபாவை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது.

தவறு செய்தவர்களுக்கு ஆதரவாகப் பேசுபவர்களைப் பார்க்கும் போது கோபம் வருகிறது. பெண்களை மதிக்க கற்றுக் கொடுப்பது போல், பெண் குழந்தைகளை மதிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டும் என நினைக்கிறேன்.

நம்முடைய வேலை வாய்ப்போ, தண்ணீர் பிரச்சினை உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் எதையும் தீர்க்க மாட்டார்கள்.

ஆனால், நாம் எந்த சாதி, எந்த மதம், எதைக் கடைப்பிடிக்க வேண்டும் எனப் பாடம் எடுப்பார்கள். நாம் தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆஷிபா விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (7)

## ...தில் சூறாவளி



...தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூறாவளி காற்றில் சிக்கி 15 பேர் பலியாகியுள்ளனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். சுமார் 2 மணி நேரம் மெட்ரோ ரயில் சேவை பாதிக்கப்பட்டது, மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பயணிகள் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்புப் பணிகளை பேரிடர் மீட்புப் படையினர் மேற்கொண்டனர். (7)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் தொடர்புடைய 300 பேருக்கு மரண தண்டனை

(பக்தாத்)

ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாத குழுவுடன் தொடர்புடைய 300க்கும் மேற்பட்டோருக்கு அந்நாட்டு நீதி மன்றம் மரண தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

ஈராக் நாட்டில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் ஆதிக்கம் செலுத்தி தாக்குதல்களில் ஈடுபட்டு வந்தனர். நாட்டின் 3 இல் ஒரு பங்கு பகுதியை அவர்கள் தங்களது கட்டுக்குள் வைத்திருந்த சூழ்நிலையும் இருந்தது.

இந்த நிலையில், கடந்த வருடம் டிசெம்பரில் ஐ.எஸ். அமைப்பினரை வெற்றிகண்டு விட்டோம் என ஈராக் அரசு அறிவித்தது. இந்நிலையில், ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய வெளிநாட்டவர் உள்ளிட்ட மொத்தம் 300 பேருக்கு அந்நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

இதுபற்றி நீதி அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், கடந்த ஜனவரியில் இருந்து 97 வெளிநாட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. 185 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

அவர்களில் பெருமளவிலான பெண்கள் துருக்கி மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் குடியரசு நாடுகளை சேர்ந்தவர்கள். கடந்த ஜனவரியில், ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர் என கண்டறியப்பட்ட ஜேர்மன் பெண்ணுக்கு ஈராக் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. நேற்று பிரான்ஸ் பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், மொசூல் நகர் அருகே டெல் கீப் பகுதியிலுள்ள நீதிமன்றத்தில் 212 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 150 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 341 பேருக்கு பிற சிறைத் தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

ஈராக்கில் ஐ.எஸ். வழக்கு விசாரணைகளில் பாதிக்கப்பட்டோரின் உண்மையான நீதி மறுக்கப்படுவதுடன், ஒன்றுமறியாத ஈராக் மக்களை மரணத்திற்கு அனுப்பும் ஆபத்தும் உள்ளது என நியுயோர்க் நகர மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் மூத்த உறுப்பினர் பெல்கிஸ்வில்லி கூறியுள்ளார். (7)

## ... மிருகம் விலங்கு அச்சம்

...கமராவில் பிடிபடுவதற்கு முன்னதாக இரண்டு நாய்களைக் கொன்றதாக கூறப்படுகிறது.

இந்த மிருகம் ஜேர்மன் ஜெப்பர்ட் நாய் போலவும், ஒட்டகத்தை போன்ற நீண்ட கழுத்துடனும் சிறிய தலையுடனும் இருந்துள்ளது.


சமூக வலைத்தளத்தில் 2005 ஆம் ஆண்டில் இதேபோன்ற ஒரு உயிரினத்தை சந்தித்ததாக ஒரு நபர் கருத்து தெரிவித்துள்ளார்.

இன்னொருவர் இலத்தீன் காட்டுப் பகுதியில் இருக்கும் சுபாக்காப்ரா என அறியப்பட்ட உயிரினத்தைப்போன்ற ஒரு வாம்பயர் என தெரிவித்துள்ளார். (7)

## டமாஸ்கஸ் பகுதிகளை மீட்க சிரிய அரசு படைகள் குண்டு வீச்சு

(டமாஸ்கஸ்)

ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள டமாஸ்கஸ் பகுதிகளை மீட்க, சிரிய படைகள் நேற்று முன்தினம் குண்டு வீசி தாக்குதல் நடத்தின.



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் பதவி விலக கோரி கிளர்ச்சியாளர்கள் உள்நாட்டு போரில் ஈடுபட்டு வருகின்றனர். தவிர ஐ.எஸ். தீவிரவாதிகளும் பல நகரங்களைப் பிடித்து வைத்துக் கொண்டு அரசுப் படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வந்தனர். இந்நிலையில், 2 மாதங்கள் கடும் சண்டைக்குப் பிறகு கிழக்கு கவுடா நகரை முழுமையாக ஐ.எஸ். மற்றும் கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்து சிரிய படைகள் கடந்த சில தினங்களுக்கு முன்பு மீட்டன.

இதையடுத்து ஐ.எஸ். பிடியில் உள்ள மற்ற பகுதிகளை மீட்கும் நடவடிக்கையில் சிரிய படைகள் கவனம் செலுத்தத் தொடங்கி உள்ளன.

டமாஸ்கஸ் நகரில் உள்ள யர்முக், ஹஜார் அல் அஸ்வத், தடாமன், குதாம் ஆகிய பகுதிகள் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் யர்முக் பகுதியில் பாலஸ்தீன அகதிகள் முகாமும் உள்ளது.

இந்நிலையில் யர்முக் மற்றும் ஹஜார் அல் அஸ்வத் பகுதிகளில் தீவிரவாதிகளின் முகாம்கள் மீது சிரிய படைகள் நேற்று முன்தினம் குண்டு வீசி தாக்குதல் நடத்தின.

இத்தகவலை சிரியாவில் உள்நாட்டுப் போரை கண்காணித்து வரும் இங்கிலாந்தைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு உறுதி செய்தது.

இந்தத் தாக்குதலில் ஒருவர் பலியானதாகவும் பலர் படுகாயம் அடைந்ததாகவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், டுமாயிர் பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்கள் விலக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதேபோல் நசிரியா, ஜய்ருட் ஆகிய பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் விலகுவது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் சிரியாவின் அரசு செய்தி நிறுவனமான 'சானா' தெரிவித்துள்ளது. (7)

## ராஜீவ் படுகொலை; பேரறிவாளன் வழக்கு உச்ச நீதிமன்றில் 4 வாரங்களுக்கு ஒத்திவைப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு 4 வாரங்களுக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் வெளிநாடுகளை சேர்ந்த குற்றவாளிகள் சிலருக்கான தொடர்பு குறித்து கண்டறிய சி.பி.ஐ. அதிகாரிகளைகொண்ட பல்நோக்கு சிறப்பு விசாரணை முறைமையை 1997 ஆம் ஆண்டு மத்திய அரசு அமைத்தது. இந்த முறைமை, விசாரணையின் முன்னேற்றம் குறித்த ரகசிய அறிக்கையை ஒவ்வொரு மாதமும் சென்னையில் உள்ள முதலாவது கூடுதல் செஷன்சு (தடா) நீதிமன்றில் தாக்கல் செய்து வருகிறது.

இந்த நிலையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று தற்போது வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன் சார்பில் உச்ச நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதில் 'சிறப்பு விசாரணை முறைமை தாக்கல் செய்துள்ள அறிக்கையில் சிறையில் வாடும் என்னையும் தொடர்புபடுத்தி உள்ளதாக கூறப்படுகிறது. அதில் பல தகவல்கள் முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டு உள்ளது' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.



இந்த வழக்கில் மூல மனுவின் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் நேற்று நீதிபதிகள் ரஞ்ஜன் கோகாய், ஆர்.பானுமதி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது சி.பி.ஐ. தரப்பில் ஆஜராக வேண்டிய மூத்த வக்கீல் உடல்நலம் சரி இல்லாமல் உள்ளதால் வழக்கின் மீதான விசாரணையை ஒத்திவைக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் வழக்கின் மீதான விசாரணையை 4 வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர். (7)

## கியூபா நாட்டின் ஜனாதிபதியாக துணை ஜனாதிபதி மிக்வெல் தெரிவு

(ஹவானா)

கியூபா நாட்டு ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோ தனது பதவியிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டதை அடுத்து புதிய ஜனாதிபதியாக மிக்வெல் டயாஸ் கனல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



அமெரிக்காவிற்கு அருகில் உள்ள மிகச்சிறிய தீவு நாடு கியூபா. இது கரீபியன் கடலில் அமைந்துள்ளது. கம்யூனிஸ்ட் ஆட்சியில் இருக்கும் இந்நாட்டில் மறைந்த புரட்சியாளரான பிடல் காஸ்ட்ரோ சுமார் 30 ஆண்டுகள் பிரதமர் மற்றும் ஜனாதிபதியாக இருந்தார்.

அவருக்கு பின் அவருடைய சகோதரர் ராவுல் காஸ்ட்ரோ சுமார் 10 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவியில் உள்ளார். 87 வயதான ராவுல் பதவியிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக பாராளுமன்ற சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இதில், துணை ஜனாதிபதியான மிக்வெல் டயாஸ் ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அவரை எதிர்த்து எந்த வேட்பாளரும் நிறுத்தப்படவில்லை.

எனவே, மிக்வெல் டயாஸ் கனல் போட்டியின்றி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சுமார் 40 ஆண்டுகளாக காஸ்ட்ரோ குடும்பத்தினர் ஜனாதிபதியாக இருந்த நிலையில், அந்த குடும்பத்தைச் சேராத ஒருவர் ஜனாதிபதி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ராவுல் காஸ்ட்ரோ ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும், கட்சியில் தலைமை பதவி மற்றும் முக்கிய பதவிகளில் இருப்பார் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (7)

# நுவரெலியாவில் சுற்றித்திரியும் மகிந்த





(ஹற்றன்)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நுவரெலியாவில் சுற்றுலா மேற்கொண்டு வருகிறார்.

72 வயதானாலும் மிகவும் இளமையாக நுவரெலியாவில் சுற்றித்திரியும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

இந்த நாட்களில் நுவரெலியாவில் ஓய்வெடுத்து வரும் மகிந்த உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ள காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

நுவரெலியா கிரகரி ஏரிக்கு அருகில் உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு மகிந்த மற்றும் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நுவரெலியாவில் சுற்றுலா பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், நாட்டின் பல பகுதியைச் சேர்ந்த மக்கள் அங்கு படையெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

# ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தல்; கருணாசேகர தொடர்ந்தும் மறியலில்

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயரை கடத்திச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்க உதவிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமல் கருணா சேகரவை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான அமல் கருணாசேகர இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் என்பதுடன், பாதுகாப்பு கல்வியல் கல்லூரியின் பிரதானியாகவும் கடமையாற்றி வருகிறார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி தெஹிவளை பிரதேசத்தில் வைத்து ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், அமல் கருணாசேகரவை அண்மையில் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய நிகழ்ச்சித் திட்டங்கள்


## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைப் பலப்படுத்தி புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல எதிர்ப்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி தலதாமாளிகைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், "இந்த நாட்டின் சமாதானம், நல்லிணக்கம், சமத்துவம் ஆகியவற்றை பலப்படுத்த வேண்டும். அதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். எமது அரசாங்கத்தால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களை அனுபவிப்பதற்கான காலம் கனிந்துள்ளது. அதேபோல் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை நிறைவு செய்வதற்கும், புதிதாக வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



பிரித்தானிய விஜயத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவு உள்ளிட்ட சில இயற்கை அழிவுகளை கடந்த வருடம் இந்த நாடு எதிர்கொண்டது எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# மீண்டும் அரசில் இணையும் எஸ்.பி.

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மீண்டும் அரசாங்கத்தில் இணையத் தயாராகி வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தில் மீண்டும் இணைவது குறித்து எஸ்.பி. திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக அந்த அரசியல் தரப்புத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்த போதிலும் அவர் சுய விருப்பத்தின் பேரில் வாக்களிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இறுதி நேரத்திலேயே எஸ்.பி.திஸாநாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்.

தன்னுடன் இணைந்து வாக்களித்த 15 பேரின் கோரிக்கை மற்றும் ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளதாக கூறப்பட்டதன் காரணமாகவே எஸ்.பி.திஸாநாயக்க நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக கூறப்படுகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் நடந்த பேச்சுவார்த்தைகளில், தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வகையில் செயற்பட வேண்டுமெனத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் அழுத்தங்களை கொடுத்த போது, ஐக்கிய தேசியக்கட்சி அழுத்தங்களைக் கொடுத்தாலும் ஜனாதிபதியுடன் தொடர்ந்தும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என எஸ்.பி.திஸாநாயக்க வலியுறுத்தியதாக அரசியல் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## முகதாட்சண்யம்

என் நண்பர்கள் இருவரிடையே வரவு- செலவு ஒன்று நடந்தது. அதில் ஒருவரிடம் தொகை தங்கிப் போயிற்று. பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நண்பர் தர வேண்டியவரிடம் போன் செய்து காச்மூச் என்று கத்திவிட்டார். பணத்தைத் தர வேண்டிய நண்பர் என்னிடம் வேதனைப்பட்டு இந்த விடயத்தைச் சொன்னார்.

இப் பிரச்சினை தீர ஒரேவழி அவரை நீங்கள் நேரில் போய்ப் பார்ப்பது தான் என்றேன்.

நண்பர் போய் விட்டு வந்து வியந்து சொன்னார். "அன்றைக்கு அப்படிக் கத்தியவரா இன்று அவ்வளவு தன்மையாகப் பேசினார்? என்னால் நம்பவே முடியவில்லை! "என்றார்.

எல்லா மனிதர்களாலும் முகத்துக்கு நேரே முழுமையாகக் கோபப்பட முடியாது. அப்படியே கோபப்பட்டாலும் அந்தக் கோபத்திற்கு ஆயுள் மிகக் குறைவு. ஒருவர் இல்லாத போது அவரைக் குறை சொல்வதும், அவர் எதிரே வந்து நின்றதும் ஆகா ஓகோ என்பதும் இதே முகதாட்சண்யத்தினால் தான் மனிதனின் இந்தப் பலவீனத்தை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால் நாம் உதவி கேட்கவோ சமாதானம் சொல்லவோ மிகவும் தயங்கி (ஏதாவது சொல்லிவிட்டால் என்ன செய்வது என்கிற தயக்கம் பின்வாங்க இடைப்பட்டவர்களை நாடி, தொலைபேசியில் கேட்டு, கடிதம் மூலம் தெரியப்படுத்தி காரியத்தைக் எடுத்துக் கொள்கிறோம்.

மகள் கல்லூரியில் இருந்து வர ஏன் இவ்வளவு நேரம் என்று தாய் கோபமாக இருக்கிறார். மகள் சிரித்துக் கொண்டே சாரிம்மா! இன்றைக்கு லேட்டாயிடுச்சும்மா! என்று சொல்லியபடி நுழைந்ததும் 500 டிகிரி வெப்பம் 5 டிகிரியாகி விடுகிறது. விடுதியில் தங்கிப் படிக்கும் செலவாளி மகளை ஒரு வாங்கு வாங்குவதென அப்பா போகிறார். "அப்பா! எப்படி வந்தீங்க?" என்று மகள் வரவேற்றதும் 500 டிகிரி வெப்பம் 5 டிகிரியாகி விடுகிறது.

மனித சுபாவங்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யாமல் நம் விருப்பத்துக்கு நடந்து கொண்டால் தோல்விகளும் அவமானங்களுமே மிஞ்சும். அது மட்டுமல்ல மனித வர்க்கத்தின் மீதே கோபம் ஏற்பட்டு அவர்களை விட்டு விலகியிருக்கவும் தோன்றும்.

மாறாக மனித சுபாவங்களை நாம் புரிந்து கொண்டுவிட்டால் அத்தனை மனிதர்களையும் நம் வசப்படுத்திவிடலாம்.

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கை இராணுவம் மீது ஐ.நா. கிடுக்குப்பிடி

(ஜெனிவா)

உலகில் எந்த நாட்டு இராணுவத்திற்கும் பிறப்பிக்காத உத்தரவை ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை இராணுவத்திற்கு பிறப்பித்துள்ளது.

அமைதிகாக்கும் பணிகளுக்காக இலங்கை இராணுவம் வெளிநாடுகளுக்கு செல்லும் போது; இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் அனுமதியைப் பெற வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் தகவல்கள் இதனைத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் முன்னர் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனரா? என்பதை கண்டறிய வேண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இறுதிக்கட்ட போருடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைதி காக்கும் படையில் இணைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகா மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மனித உரிமை ஆணைக் குழு மற்றும் ஐ.நா. அமைதி காக்கும் படையின் தலைமை அதிகாரி லேய்ரோய் ஆகியோரிடம் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளமையே இந்த உத்தரவுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், அமெரிக்கா உட்பட 8 நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகின்ற போதிலும் அந்நாடுகளுக்கு இப்படியான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. (இ-7)

# சகல மோசடிகளையும் அம்பலப்படுத்துவேன்

## பிரதியமைச்சர் ரஞ்சன் எச்சரிக்கை


(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் சகல மோசடி நடவடிக்கைகளையும் தாம் அம்பலப்படுத்த உள்ளதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமூக வலுவூட்டல் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற அனைத்து ஊழல் மோசடிகள் பற்றிய விபரங்கள் ஆவணங்கள் என்னிடம் உண்டு.



இந்த விடயங்கள் பற்றி நான் விரைவில் நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்துவேன்.

கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் மத்திய வங்கி பிணைமுறி மோசடிகளை விடவும் ஆபத்தானது.

இந்த மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் அனைத்து தரப்புக்களிடமும் முறைப்பாடு செய்வேன்.

விசாரணைகளுக்கு பாதகம் ஏற்படும் என்ற காரணத்தினால் யார் யார் தொடர்புபட்டுள்ளார்கள் என்பது பற்றிய விடயங்களை இப்போது அம்பலப்படுத்தப் போவதில்லை.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நபர்கள் முனிவர்களைப் போன்று காலத்தை கழிக்கின்றனர்.

இதில் சில விளையாட்டுத்துறை அமைச்சர்களும் உள்ளடங்குகின்றார்கள்.

கிரிக்கெட் நிறுவனத்தின் மோசடிகளை அம்பலப்படுத்தி கிரிக்கெட் நேசிக்கும் மக்களுக்கு நியாயத்தை வழங்க வேண்டுமென ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# சுவிஸில் இடம்பெற்ற விபத்தில் இலங்கையர்கள் பலர் காயம்



(சூரிச்)

சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் இலங்கையர்கள் பலர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுற்றுலாவுக்குச் சென்ற இலங்கையர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று நேற்று முன்தினம் சுவிஸில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் 15 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 சுற்றுலாப்பயணிகளை ஏற்றிச் சென்ற இந்த பேருந்து, சூரிச்சின் வடக்குப்பகுதி அதிவேக வீதியில் வைத்து இரண்டு கனரக வாகனங்களுடன் மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15க்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று சுவிஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஜி.எஸ்.பி. 22 ஆம் திகதி முதல் இலங்கையில் நடைமுறைக்கு வரும்

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு அமெரிக்காவால் வழங்கப்படுகின்ற ஜி.எஸ்.பி. வரிச் சலுகை நாளை மறுதினம் 22ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனக் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.



இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கையொப்பமிட்டிருந்தார். அதன்படி இந்த வரிச் சலுகை இம்மாதம் 22ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஐக்கிய அமெரிக்காவின் முன்னுரிமைப்படுத்தலுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம் (ஜிஎஸ்.பி.) 2017ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகிய நிலையில் அதன் மீள் அங்கீகாரத்தை அமெரிக்க காங்கிரஸ் வழங்கவில்லை. இதன் விளைவாக ஜி.எஸ்.பி. கடந்த 2017 ஆம் ஆண்டுடன் காலாவதியாகியதால், இலங்கை மற்றும் ஜி.எஸ்.பி. சலுகை பெறும் நாடுகள் மற்றும் பிரதேசங்களிலிருந்து அமெரிக்காவிற்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கு ஜனவரி 1, 2018 முதல் அமுலுக்கு வரும் வகையில் முன்னுரிமையற்ற வரிகள் விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மீண்டும் அந்த வரிச் சலுகையை வழங்குவதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தண்டனைக்காக மனுக் கொடுத்த இலங்கை அகதியின் அவல நிலை

(சென்னை)

தன்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்காக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்து, தண்டனை பெற்றுத்தருமாறு இலங்கை அகதி ஒருவர் இராமநாதபுரம் மாவட்ட பொலிஸ் அதிகாரியிடம் மனு அளித்துள்ளார்.

இலங்கையிலுள்ள வயதான தன் தந்தையுடன் இறுதிக்காலத்தை கழிக்க இலங்கை செல்ல வேண்டும் என்பதற்காகவே இவர் தன் மீதான வழக்கை விரைவில் முடிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய கஜேந்திரநாத் (டேவிட்) என்ற நபரே மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கையில் நடந்த விபத்தில் காயமடைந்த கஜேந்திரநாத்திற்கு இரத்தம் ஏற்றியபோது அதன் மூலம் எச். ஐ. வி கிருமி தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் எச்.ஐ.விக்கு முறையான சிகிச்சையளிக்க மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தினால் கடந்த 2015ஆம் ஆண்டு மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக கள்ளத்தோணியில் தமிழகம் சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றவரை மண்டபம் பொலிஸார் கைது செய்து சென்னை புழல் சிறையில் அடைத்து பின்னர் பிணையில் வெளியில் வந்துள்ளார்.

வெளியில் வந்த கஜேந்திரநாத் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி வைத்திய சாலையில் எச்.ஐ.வி. பாதிப்பிற்கு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

தங்க இடம் இல்லாததால் வைத்தியசாலை வளாகத்தில் தங்கியுள்ள கஜேந்திரநாத் தனக்கு இலங்கை அகதிகள் முகாமில் இடமளிக்குமாறு நெல்லை கலெக்டருக்கு கோரிக்கை மனு ஒன்றும் அளித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் வயது முதுமையால் அவதிப்படும் தந்தை சண்முகநாதனுடன் இறுதிக்காலத்தை கழிக்க விரும்பியுள்ளார்.

ஆனால் சட்டவிரோதமாக இந்தியா வந்த குற்றத்திற்கு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், சிகிச்சைக்காக கள்ளத்தோணியில் வந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தன் மீதான குற்றத்திற்கு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, தண்டனை வழங்க வேண்டும்.

அவ்வாறு வழங்கினால் வழக்கை விரைவாக முடித்து இலங்கை சென்று தந்தையின் இறுதிக்காலத்தில் துணையாக இருக்க முடியும் என்ற காரணத்தினாலேயே மனு கொடுத்துள்ளார். (இ-7)

# மாகாணசபைத் தேர்தல் விகிதாசார முறையில்

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை பழைய விகிதாசார முறையின் கீழ் நடத்த அனைத்துக் கட்சிகளும் விருப்பத்துடன் உள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பிரதமர் நேற்று முன்தினம் மேற்கொண்ட கண்டி விஜயத்தின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# 66வது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும்

(யாழ்ப்பாணம்)


கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டு கழகம், மாதர் மன்றம், பாலர் பாடசாலை இணைந்து நடத்தும் 66ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டி பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் கடந்த 14ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

இறுதி நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நாராயண சனசமூக நிலையத் தலைவர் தெ.சுதர்சன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# நாட்டில் எந்தவிதமான உரத்தட்டுப்பாடும் இல்லை

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் எந்தவிதமான உரத்தட்டுப்பாடும் கிடையாது என கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் உர விநியோகத்தில் எந்தவிதமான தட்டுப்பாடும், தாமதமும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது. சகல விடயங்களையும் கணனிமயப்படுத்தி வருவதால் ஊழல் மோசடிகளுக்கும் இடமில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விவசாயத்துறை அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், யூரியா, ரி.எஸ்.பி., எம்.ஓ.பி., எஸ்.ஏ. என்ற சகல வகை உரங்களும் 1500 ரூபாவுக்கு குறைவான விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

ஒரு பொதி யூரியாவின் விலை மூவாயிரத்து 500 ரூபாவாக இருந்தால் அரசாங்கம் இரண்டாயிரம் ரூபாவை பொறுப்பேற்கும்.

அதேபோன்று நெற்செய்கைக்கான உரப்பொதிக்கான செலவில் மூவாயிரம் ரூபாவை அரசாங்கம் ஏற்கிறது. இது தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், 011 303 6666 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்கலாம் என்று தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக்கு பில்கேட்ஸ் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத்துறையை மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் பில்கேட்ஸ் பாராட்டியுள்ளார்.




இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தரமுயர்ந்த ஆரம்ப சுகாதார சேவைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் பொதுநலவாய நாடுகள் இலங்கையை நோக்க வேண்டும் என பில்கேட்ஸ் தெரிவித்தார்.

லண்டனில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டின் கூட்டு பூர்வாங்க அமர்வில் பில்கேட்ஸ் உரையாற்றினார்.

இந்த மாநாடு பொதுவான எதிர்காலத்தை நோக்கி என்ற தொனிப் பொருளில் இடம் பெற்றது.

சமகாலத்தில் பெருமளவு சுகாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை தீர்க்கும் வழிவகைகளில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய புரட்சியை ஏற்படுத்த பொதுநலவாய அங்கத்துவ நாடுகளில் அனுசரிக்கும் சிறந்த நடைமுறைகளை ஒட்டுமொத்த உலகமும் வரித்துக் கொள்வது அவசியம். இந்த விடயத்தில் இலங்கையும் பங்களாதேஷும் முன்னணியில் திகழ்கின்றன.

அந்நாடுகளில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் கூடுதலாக, பெண் சுகாதார பராமரிப்பு ஊழியர்களால் முன்னெடுக்கப்படுவது சிறப்பம்சம் என மைக்ரோ சொப்டின் ஸ்தாபகத் தலைவர் பில்கேட்ஸ் தெரிவித்தார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 26


பரமசாமி பஞ்சாட்சரம்

### புத்த பெருமானின் தாயாரும் சியு கோம்ப மொனாஸ்றியும்

புத்த பெருமானின் தாயாகிய மாயாதேவி தனது நேபாளத்திலுள்ள அரண்மனையிலிருந்து மானசரோவர் ஏரிக்கு வந்து மானசரோவர் ஏரியில் நீராடித் தனக்குப் புத்திரன் வேண்டுமென்று கயிலையை நோக்கிச் சிவபெருமானை நினைத்து வழிபாட்டதாகவும் இதன் பயனாகச் சித்தார்த்தரைப் பெற்றெடுத்தார் என்றும் சரித்திரம் கூறுகிறது. மாயாதேவி அங்கு வந்தபோது தங்கியிருந்த இடத்தை ஒரு புத்த கோவிலாக்கி இருப்பதைக் கிரிவலத்தின் போது காணலாம். இப் புத்த கோவிலைச் "சியு கோம்ப மொனாஸ்றி" (Chiu Gompa Monastery) என்று அழைக்கின்றார்கள். இக்கோயிலை நேபாள மக்களும் திபெத்திய மக்களும் திரளாக வந்து வணங்கிச் சென்றார்கள்.

இங்கு புத்த பெருமானின் தாயாகிய மாயாதேவியின் ஞாபகார்த்தமாக அமைந்திருக்கும் சிறிய கருவறையும், ஐந்தடி உயரமுள்ள புத்தர் சிலையும் சிலைக்கு இடப்புறத்தில் 'கோப தெய்வம்' என்று அழைக்கப்படும் புத்தர் படமும் இருக்கின்றன. இந்தப் புத்தர் படத்திலே அவர் கோபமாக இருப்பதைப் போன்று வரையப்பட்டுள்ளது.

இங்கு பழைய புனித நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்



ளன. இக்கோவிலுக்கு அருகாமையில் மூர்த்தங்கள் எனப்படும் கற்களை அடுக்கி வைத்திருக்கின்றார்கள். இவை பௌத்த சின்னங்கள் என்று சொல்லப்பட்டது. இக்கோவிலுக்குப் பின் பக்கத்தில் ஒரு மின் உற்பத்தி நிலையமும் சுடுநீர் ஊற்றும் காணக்கூடியதாக இருக்கின்றன. எங்கள் குழுவிலிருந்து சிலர் அங்கு சென்று நீராடி வந்தார்கள். மானசரோவர் பரிக்கிரமாவில் வரும் போது மேற்குப் பக்கமாக இராவணன் ஏரி வருகின்றது என்று பேருந்தை நிறுத்தினார்கள்.

### ஏழாம் நாள் 08.08.14 இராவணன் ஏரி (உயரம்:-4550மீ)

இராணவனன் ஏரி மானசரோவர் கிரிவலப் பாதையில் வரும் போது விசாலமான பெரிய ஏரியாகக் காட்சி தருகிறது.

மகா சிவபக்தனும் பிரம்மாவின் பூட்டனும் இலங்கை அரசனுமாகிய இராவணன் தான் நீராடிச் சிவனை வழிபட வேண்டுமென்பதற்காக இந்த ஏரியை இலங்கையின் அரசனாக இருந்த போது அமைத்தார் என்று திபெத்திய புராணம் கூறுகிறது.

கம்ப இராமாயணத்தில் இந்த ஏரி "இராட்சத ஏரி" என்று கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த ஏரியை இந்தியர்கள் இராட்சத ஏரி என்று அழைகின்றார்கள். நேபாளத்திலும் திபெத்திலும் அரசாங்க வரைபடங்களில் இந்த ஏரி "இராவணன் ஏரி" என்றும் "லங்கா ஏரி" என்றும் எழுதப்பட்டிருக்கின்றது.

### இராவணன் ஏரியின் மகிமை

இராவணன் இந்த ஏரியில் ஒற்றைக் காலில் நின்று மூன்று முறை தவம் செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த ஏரியில் பல தடவைகள் சிவபெருமான் தோற்றமளித்துள்ளார் என்றும் இங்கிருந்து வரங்கள் பல கொடுத்துள்ளார் என்றும் இந்த இடம் கயிலாய மலையைத் தரிசிப்பதற்குச் சிறந்த இடமென்றும் கருதி இந்த ஏரிக்குத் தெற்கே "குருர்லால" என்னும் இடத்தில் இருக்கும் பார்வைக்குரிய மண்டபத்தை (4910 m- View of Mt Kailash) சீன அரசாங்கம் அமைத்திருக்கின்றது. கயிலாய மலையிலே படியும் பனியில் இருந்து உருகி வரும் நீர் இராவணன் ஏரிக்கு வருகின்றது.

இந்த ஏரிக்கு வடக்கே உள்ள 'தீர்த்த புரி'யில் (Tirthapuri is 60 km from Darchen) சுடுநீர் ஊற்று இருக்கின்றது. இதனால் வடக்கிலும் தெற்கிலும் மக்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்று சீன வழிகாட்டுபவர் தெரிவித்தார். இந்த ஏரியைச் சீனரும் திபெத்தியரும் பெரும் திரளாக வந்து பார்க்கின்றார்கள் என்று திபெத்தியர்களும் சீனர்களும் பெருமைப்படுகிறார்கள்.

### இராவணன் ஏரியின் விபரம்

இராவணன் ஏரி சுமார் 150மீ ஆழமும் 250 சது.கி.மீ. பரப்பும் 125 கி.மீ. சுற்றளவும் கொண்டது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 4575மீ உயரத்தில் உள்ளது. ஏரியின் நடுவே இரு பெரிய தீவுகளும் இரு சிறு தீவுகளும் உள்ளன.

(தொடரும்)





நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம்,நல்லிணக்கம், இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி சிவனொளிபாதமலை நோக்கிய புனிதத் திருத்தல யாத்திரை நேற்றுக்காலை நல்லூர்க்கந்தன் ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த யாத்திரை மூன்று நாட்கள் இடம்பெற்று சிவனொளிபாதமலையை சென்று நிறைவடையும். இந்து சமய தொண்டர் சபை, சின்மயா மிஷன் ஆகியன இணைந்து முன்னெடுத்துள்ள இந்த யாத்திரையை யாழ்ப்பாணம் சின்மய மிசன் சுவாமிகள், யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதி ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். (படங்கள்: உ.சாளின்)

# புனர்வாழ்வு நிலையத்திற்கு காணி வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"மாதவம்" எனும் ஓட்டிசம் மற்றும் மூளை, நரம்பு விருத்தியுடன்தொடர்புடைய கோளாறுகள் தொடர்பாக பணிபுரிகின்ற நிலையமானது தற்போது பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் இயங்கி வருகின்றது. இது 2014 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு யாழ்ப்பாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற ஒரு மருத்துவத் துறை சார்ந்த வளநிலையமாகும். இங்கு சிறப்புத் தேர்ச்சி பெற்ற வைத்திய உத்தியோகத்தர், சிறுவர் உளவளத்துணை சார்ந்த பணிகளை புரியும் உத்தியோகத்தர்கள், உளமருத்துவ நிபுணர், குழந்தை வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர், பேச்சு மற்றும் மொழி தொடர்பான சிகிச்சையாளர் ஆகியோர் பகுதி நேரமாக கடமையாற்றி வருகின்றனர். இந் நிலையத்தில் தற்போது 15 பிள்ளைகள் சிகிச்சை பெற்று வருவதுடன் 42 பிள்ளைகள் பின் தொடர் சிகிச்சைகளைப் பெற்று வருகின்றனர்.

இந் நிலையத்தினால் வழங்கப்பட்டு வரும் சிகிச்சை நடவடிக்கைகளினை மேம்படுத்த போதிய வசதிகளைக் கொண்ட கட்டடம் இன்றியமையாததாகும். இந் நிலையமானது தற்போது வாடகை கட்டடமொன்றில் இயங்கி வருவதனால் சிகிச்சை முறைகளை அபிவிருத்தி செய்வதற்கு போதுமான வசதிகளை எற்படுத்துதலில் தடங்கல் காணப்படுகின்றது. நிலையக் கட்டடத்தினை அமைப்பதற்குத் தேவையான நிதியினை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ள போதிலும் இந் நிலையத்தினை அமைப்பதற்கு ஏறத்தாழ மூன்று பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியொன்று தேவையாகவுள்ளது. யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில் இந் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு தேவையான காணியினை நன்கொடையாக வழங்க எவரும் முன்வரின் உடனடியாக வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ)

# ஐ.தே.கவுக்குள் உயர் தரத்தில் ஜனநாயகம் உள்ளது

## நவீன் திஸாநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

யார் என்ன அறிவிப்புக்களை விடுத்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உயர் தரத்தில் ஜனநாயகம் இருப்பதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சி தலைவர் உட்பட கட்சிக்கான அதிகாரிகள் நியமனத்திலும் தற்பொழுது சுயாதீனமான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நேற்று முன்தினம் நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.தே.கட்சிக்குள் ஜனநாயகம் குறைவு எனவும், குறிப்பிட்ட சிலரிடம் அதிகாரம் சுற்றுவதாகவும் அக்கட்சியிலுள்ள முக்கிய உறுப்பினர்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.


பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையிலும் இந்த கருத்தை அடிப்படையாக வைத்தே பிரதமருக்கு எதிராக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தலைமையில் 27 எம்.பிக்கள் ஒன்று கூட்டுச் சேர்ந்ததன் மூலம் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினை வீதிக்கு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1389

Search for people, places and things    Nagendram Home

### ராகுலன்

காலையில் வோக்கிங் போய்க்கிட்டு இருக்கிறவன்கிட்ட



வாங்க ட்ரோப் பண்றேன்னு சொல்லிக்கிட்டு பைக்க நிறுத்துறான் பாருங்க அவன்தான் உண்மையான பாசக்காரன்

### ஆதித்யா

30 வயசு வரைக்கும் எதிர்காலத்தை எப்படி அனுபவிக்கப் போறோம்னு கவலைப்படுகிறோம்...



30 வயசுக்கு மேல கடந்த காலத்தை அனுபவிக்காம விட்டோமேன்னு கவலைப்படுகிறோம்...!

### பாலன்

படம் பார்க்கும் போது அநியாயத்தைத் தட்டிக் கேட்கணும்னு பொங்குற மனசு



இன்டர் வெல்ல முட்டை போண்டாவை முப்பது ரூபாய்க்கு வாங்கிச் சாப்பிட்டிட்டு பேசாம வந்திடுது

### சம்பத்

எந்தச் சாதி என்று தெரியாத ஒரு கூலித் தொழிலாளி காலில் மிதிபட்ட நெல்லைத்தான்



எல்லாச் சாதிக்காரர்களும் உண்கிறோம் என்பதை நினைவில் கொள்!!!

### அகிலன்

பணி முடிந்து தின் பண்டம் வாங்கும் தந்தையின் பிரதான கவலை



தான் வீடு செல்வதற்குள் குழந்தைகள் உறங்கிவிடக் கூடாதென்பதே ஆகும்!!!

### பாமினி

பறவையை நேசிக்க கூண்டுகள் வாங்க வேண்டாம்



ஒரு மரம் வளர்த்தாலே போதும்....!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2018-14.05.2018

## வாய்ப்புக்கள் வாசல் தேடி வரும்!



விளம்பி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு தொழில் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனியும் இணைந்திருக்கின்றார். சனி, செவ்வாய் சேர்க்கை திருப்தியான பலன்களைக் கொடுக்காது. என்றாலும் அதன் ஆதிபத்தியங்களின் அடிப்படையில் பார்க்கும் பொழுது ஓரளவு எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்க வேண்டும்.

குருவினுடைய பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். எதிர்பார்ப்பு அனைத்தும் எப்படியாவது கடைசி நேரத்தில் நிறைவேறிவிடும். உரிய பலன்களை உங்களுக்கு வழங்கப் போவது குருவின் பார்வை பலன் தான். அப்படிப்பட்ட குருவை வியாழக்கிழமை தோறும் நீங்கள் விரதமிருந்து வழிபட்டு வந்தால் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் நிறைவேறும்.

மாதத் தொடக்கத்தில் பஞ்சம ஸ்தானாதிபதி சூரியனோடு 2, 7இற்கு அதிபதியான சுக்ரன் இணைந்திருப்பதால் பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க முற்படுவீர்கள். இதுவரை எத்தனையோ வரன்கள் வந்தும் முடிவடையவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது மக்கள் செல்வங்களுக்கு மணமாலை சூடும் வாய்ப்பு வரப்போவதை அறிந்து மகிழ்ச்சிக் கடலில் மிதக்கப் போகிறீர்கள்.

பணவரவு திருப்திகரமாக இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். குடும்ப முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பிள்ளைகள் வெளிநாடு சென்று சம்பாதிக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கான முயற்சி எடுக்க முன்வரும் நேரமிது.

விரய ஸ்தானத்தில் புதன் நீச்சம் பெற்றுச் சந்திரனோடு இணைந்திருக்கின்றார். 3, 6இற்கு அதிபதியான புதன் நீச்சம் பெற்றிருப்பதால் உடன்பிறப்புகளால் வாழ்க்கையில் சில பிரச்சினைகள் உருவாகலாம். வேலை மாற்றங்களும், பணியில் இருந்து விலகும் சூழ்நிலையும் ஒருசிலருக்கு ஏற்படலாம். சுகஸ்தானத்தில் ராகு இருப்பதால் அவ்வப்போது ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும்.

### ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 21ஆம் திகதி தனாதிபதி சுக்ரன் தன ஸ்தானத்தில் வருகின்றார். இக்காலம் ஓர் இனிய காலமாகும். எடுத்த காரியங்கள் எளிதில் முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வங்கிச் சேமிப்பு உயரும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரலாம். சொந்த வீடு மற்றும் இடம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் கைகூடும் நேரமிது.

### சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25ஆம் திகதி முதல் தனுசு இராசியில் சனி வக்ரம் பெறுகின்றார். சனி பகவான் தொழில் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குவதால், தொழில் கூட்டாளிகளிடம் கூடுதல் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது. உங்களுக்கு வரவேண்டிய லாபத் தொகை ஏட்டில் எழுதியிருக்கும். ஆனால் கையில் வராது.

### மகர செவ்வாயின் சஞ்சாரம்!

ஏப்ரல் 30ஆம் திகதி மகர இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அது செவ்வாய்க்கு உச்ச




வீடாகும். இக்காலம் ஒரு பொற்காலமாகும். எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ, அதை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள்.

தொழில் முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். அரசாங்க ஆதரவோடும், அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்போடும் புதிய தொழில் தொடங்கும் திட்டம் வெற்றி பெறும். கிளைத்தொழில் தொடங்கும் வாய்ப்பும், ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் யோகமும் வந்து சேரும்.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மே 3ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். புதிய உத்தியோகத்திற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு அது கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்தும் அழைப்புகள் வந்து சேரலாம். சகோதர ஒற்றுமை பலப்படும். இம்மாதம் ராஜகிரகமான சூரியனை ஞாயிற்றுக்கிழமை தோறும் வழிபட்டு வாருங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் உங்களுக்கு கிரக நிலைகள் சாதகமாகவே உள்ளது. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். சுற்றியிருப்பவர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். புதிய ஆடை, அணிகலன்கள் வந்து சேரும். கணவன்-மனைவி இடையே அன்பும், பாசமும் மேலோங்கும். தடைப்பட்ட புத்திர பாக்கியம் கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். உத்தியோகத்தில் தற்காலிகப் பணியில் உள்ளவர்களுக்கு நிரந்தரப்பணி அமையும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். உங்கள் பெயரிலேயே வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. சனி, செவ்வாய் சேர்க்கை இருப்பதால் அதற்குரிய சிறப்பு வழிபாடுகளை உங்களுக்குரிய திசாபுத்தி அடிப்படையில் செய்தால் மனஅமைதி கூடுதலாகக் கிடைக்கும். குருவழிபாடு குதூகலம் தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**

## ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள்!



விளம்பி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரனும் சுகாதிபதி சூரியனும் இணைந்து சஞ்சரிக்கின்றார்கள். எனவே ஆரோக்கியத்திற்காக அதிகம் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். அதே சமயம் குருவின் பரிபூரண பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால், மருத்துவர்களின் ஆலோசனைப் படி நடந்து கொள்வது நல்லது. அதனால் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிய இயலும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வலுவாக உள்ளது. அதோடு செவ்வாயும் இணைந்திருப்பதால் திடீர் திடீரெனத் திட்டங்களை மாற்றியமைக்கும் சூழ்நிலை ஏற்படும். வருமானம் வந்த மறுநிமிடமே செலவாகும். சேமிப்புகள் கரைகின்றதே என்று கவலைப்படுவீர்கள். உடன்பிறப்புகள் வழியிலும், உடனிருப்பவர்கள் வழியிலும் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதியைத் தக்க வைத்துக் கொள்ள இயலும்.

குரு வக்ரம் பெற்றிருப்பது ஒருவகைக்கு நன்மைதான். 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவதால் தொழில்புரிபவர்கள் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதியவர்களை இணைத்துக் கொள்ள முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளை சரிவர கவனித்துக்கொள்வது நல்லது. சக பணியாளர்களிடம் உங்கள் பொறுப்புகளை ஒப்படைத்தால் அதை அவர்கள் சரிவரச் செய்ய மாட்டார்கள். எனவே மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம்.

புதன் நீச்சம் பெற்று சந்திரனுடன் இணைந்திருப்பதால் ஒரு தொகை செலவழிந்த பிறகே மற்றொரு தொகை வந்து உங்கள் கரங்களில் புரளும். வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளாக இருந்தால் உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.

3இல் ராகுவும், 9இல் கேதுவும் இருப்பதால் உடன்பிறந்தவர்களில் ஒருசிலர் மட்டும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் முடிவடைவதில் தாமதங்கள் ஏற்படலாம். தந்தையின் உடல்நலத்தில் கவனம் தேவை.

### ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 21ஆம் திகதி உங்கள் இராசிநாதன் சுக்ரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். இற்கு அதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஒரு உன்னதமான நேரமிது. பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரலாம். பணி ஓய்விற்குப் பிறகு வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வரவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அதுவும் வந்து சேரும். எதிரிகளின் தொல்லை ஓரளவு குறையும். வழக்குகள் சாதகமாக அமையலாம்.

### சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் தனுசு இராசியில் சனி பகவான் வக்ரம் பெறுகின்றார். அஷ்டமத்துச் சனி வக்ரம் பெறும் இந்த நேரத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு இருந்தால் தான் விரயங்களிலிருந்து விடுபட




இயலும். மேலும் சப்தம விரயாதிபதி செவ்வாயும் அவரோடு இணைந்து சஞ்சரிப்பதால், தேவையில்லாத வீண் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும். குடும்ப நிம்மதி குறையும். விற்ற சொத்துகளில் வில்லங்கங்கள் ஏற்படும். இதனால் உறவினர் பகை உருவாகலாம். எனவே இக்காலத்தில் குலதெய்வ வழிபாடும் அங்காரக சனிப்ரீதியும் செய்வது நல்லது.

### மகர செவ்வாயின் சஞ்சாரம்!

ஏப்ரல் 30ஆம் திகதி 7, 12இற்கு அதிபதி செவ்வாய் மகர இராசியில் உச்சம் பெறுகின்றார். எனவே பயணங்கள் அதிகரிக்கும் வாகன யோகம் உண்டு. வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலமும் வருமானம் வரலாம். ஒருசிலருக்கு அந்நிய தேச அழைப்புகள் வந்து சேரும்.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

தன பஞ்சமாதிபதியான புதன், மே 3 ஆம் திகதி மேஷ இராசிக்கு வருகின்றார். அது விரயஸ்தானம் என்பதால் பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். பூர்வீகச் சொத்துகளை விற்றுவிட்டுப் புதிய சொத்துகளை வாங்க முன்வருவீர்கள். நல்ல சம்பவங்கள் நடைபெறும் நேரமிது. பிள்ளைகளுக்கான கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இம்மாதம் செவ்வாய்க்கிழமை விரதமும், சனிக்கிழமை அன்று அனுமன் வழிபாடும் சந்தோஷத்தை நிலைக்க வைக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் அஷ்டம ஸ்தானம் வலுப்பெறுவதாலும் சனி, செவ்வாய் சேர்க்கை பெற்றிருப்பதாலும், நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றுமாகவே இருக்கும். நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பணவரவு திருப்தி தரும் என்றாலும் உடனுக்குடன் விரயமாகிவிடும். பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளவும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைத்தாலும் திருப்தி ஏற்படாது. மின்சாதனப் பழுதுகள் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றம், இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். ஆஞ்சநேயர் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

(தொடரும்)

# தனி நாட்டை கைவிட்ட சம்பந்தனை சிங்கள தேசம் புரிந்து கொள்ளவில்லை

## அமைச்சர் மனோ கவலை

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனின் எதிர்க்கட்சி தலைவர் பதவி பற்றி மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது. அவர் முழு நாட்டுக்கும் பணி செய்கிறார் இல்லை என்று சொல்லி அதை பறித்து தமக்கு தரச் சொல்லி பொது எதிரணி கூறுகின்றது. ஆனால் அதை விட முக்கியமாக சம்பந்தன், இலங்கை நாட்டின் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்றதன் மூலம், தனியொரு நாடு என்ற இலக்கை கைவிட்டு, நாம் ஒரே நாட்டுக்குள் வாழ்வோம் என்ற செய்தியை, சிங்கள தேசத்துக்கு தருகிறார். அதன் முக்கியத்துவத்தை உங்களால் உணர முடியவில்லையா?" என நான் சிங்கள மொழியில், சிங்கள ஊடகங்கள் மூலமாக கடந்த சில நாட்களில் பலமுறை கேட்டுள்ளேன். வழமையாக எனக்கு பதில் கூறும் சிங்கள அரசியல்வாதிகள் எவரும் கூட இதுவரை இதற்கு இன்னமும் பதில் கூறவில்லை. பிரபல "விகல்ப" ஊடகம் மட்டுமே, "மனோ கணேசனின் இந்த கருத்தை, ஜனநாயகம் பற்றிய ஒரு துளிகூட அறிவற்ற தென்னிலங்கை சக்திகளால் புரிந்துகொள்ள முடியாது" என கூறியுள்ளது என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தனது சமூக ஊடக தளங்களில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் ஊடகங்களிடம் கூறியுள்ளதாவது,

ஐ.தே.க., ஸ்ரீல.சு.க ஆகிய கட்சிகள் மத்தியில் இடையிலான அக்கப்போர் எங்கள் பிரதான பிரச்சினை அல்ல. எம் முன்னுரிமை பட்டியலில் முதலிடம் இனப்பிரச்சினை தீர்வு ஆகும். அதற்காகத்தான் தேசிய இனப்பிரச்சினைக்கு, பிரிபடாத நாட்டுக்குள்ளே தீர்வு காண புதிய அரசியலமைப்பு பணியை ஆரம்பித்தோம். அதில் நானும், சம்பந்தனும் உட்பட அனைத்து கட்சித்தலைவர்களும் இருக்கிறோம்.



ஆனால், தற்போதைய அரசியல் சந்தடிகளில் காணாமல் போயுள்ள புதிய அரசியலமைப்பு பணியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். பிரதமர் தலைமையிலான வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்ட வேண்டும். இது பற்றி சம்பந்தனை, கடந்த வாரம் ஒரு நிகழ்வில் சந்தித்த போது, நான் சொல்ல, அவரும் எனது கருத்தை ஏற்றுக் கொண்டார்.

உண்மையில் கூட்டமைப்பு தலைவர் என்ற அடிப்படையிலேயே அவர் அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் இருக்கிறார், இனப்பிரச்சினை தீர்வுக்கான வழித்தேடல் என்ற அடிப்படையில் தான் அவர் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு அமர்த்தப்பட்டார். எதிர்க்கட்சி தலைவர் என்ற அடைப்படையில்தான், அரசியலமைப்பு பேரவையில் இருக்கிறார். இவை சர்வதேச சமூகத்துக்கு பிடித்தமான நடவடிக்கைகள். இந்நிலையில், இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்காக மீண்டும் புது அரசியலமைப்பு பணிகள் ஆரம்பமாக வேண்டும். உண்மையில் புது அரசியலமைப்பு பணிகளை ஆரம்பிக்க முடியாவிட்டால், எதிர்க்கட்சி தலைவர் பதவியினால் பெரும் பயன் விளையப் போவதில்லை. சர்வதேச சமூகம்தான் ஆஹா, இலங்கையின் எதிர்க்கட்சி தலைவர் ஒரு தமிழர் என சந்தோஷப்படும்.

பலர் குற்றம் கூறுவதைப் போல், முழு நாட்டுக்கும் எதிர்க்கட்சி தலைவராக செயற்படாவிட்டாலும் கூட, தேசிய நல்லிணக்கம், நல்லெண்ணம் ஆகியவை பாற்பட்ட தனது நல்ல செய்தியை கூட தென்னிலங்கை புரிந்து கொள்ளாததைப்பற்றி சம்பந்தன் சிந்தித்து பார்க்க வேண்டும். புதிய அரசியலமைப்பு இல்லையென்றால், இனப்பிரச்சினைக்கு தீர்வில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வில்லையென்றால், எதிர்க்கட்சி தலைவர் பதவி சும்மா பக்க வாத்தியம்தான். சில அதி தீவிரவாத தமிழ் தரப்புகள் மத்தியில் இருந்து கடும் விமர்சனத்தை எதிர்கொள்ளும் சம்பந்தனின் நியாயமான கோரிக்கைகள்கூட கணக்கில் எடுக்கப்படாவிட்டால், இந்நாடு மீண்டும் பேரழிவை எதிர்கொள்ள நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கிழக்கில் வெளிவந்த தமிழர்களின் புராதனப் பொக்கிஷங்கள்





மட்டக்களப்பு பகுதியை சிற்றரசர்கள் ஆட்சி செய்த காலப்பகுதியில் அவர்களுக்குரிய நீதிமன்றம் மற்றும் குற்றம் செய்யும் சிறைக் கைதிகளை அடைத்து வைத் திருப்பதற்கான சிறைச்சாலை என்பன இருந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1832 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீடு ஒன்றின் எஞ்சிய பகுதி ஒன்றும், ஏனைய கட்டடங்கள் சில சிதைவடைந்த நிலையிலே மண்ணில் புதையுண்டு போயுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பகுதியை சிற்றரசர்கள் ஆட்சி செய்து வந்த காலப்பகுதியில் அம்பாறை மாவட்டம் கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள பழைமைவாய்ந்த நற்பிட்டிமுனைக் கிராமத்தை மையமாக வைத்தே வன்னிமைக்கான திக்கதிபர்கள் ஆட்சி செய்துவந்துள்ளார்.

இக்கிராமத்தை மையமாக வைத்தே மக்கள் குடி யேற்றங்கள் ஏனைய கிராமங்களுக்கு பரவியுள்ளது. அக் காலத்தில் நாப்புட்டி முனை என அழைக்கப்பட்ட தற்போது நற்பிட்டிமுனையாகவுள்ள கிராமத்தில் பூங்கொடிவெட்டை (தற்போது புங்கடிவெட்டை) என அழைக்கப்படும் இடத்தில் வன்னிமைக்குரிய பரம்பரையினம் வாழ்ந்துள்ளது. தற்போதும் அவர் களின் வழித்தோன்றல்கள் இங்குள்ளன. இங்கு சிற்றரசர்களுக்குரிய நீதிமன்றம் மற்றும் குற்றம் செய்யும் சிறைக் கைதிகளை அடைத்து வைத்திருப்பதற்கான சிறைச்சாலை என்பன இருந்துள்ளது. அக்கட்டடங்கள் அமைந் திருந்தற்கான தடயங்கள் உள்ளன.

சொறிக் கற்களால் கட்டப்பட்ட வீடுகள், மதில்கள், அத்திபாரக்கட்டுக்கள், சித்திர வேலைப்பாடுடன் கூடிய அழகிய ஜன்னல்கள், நிலைகள், கதவுகள், மோட்டு வளைவில் பாரிய மரக்குற்றிகள், உறுதியான மரங்கள் நாட்டோடு போடப்பட்ட வீடு என்பன இன்னும் எச்சங்களாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவை வைத்து இந்தியாவை மிரட்டும் இலங்கை அரசாங்கம்

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

(சென்னை)

கோவளம் பகுதியில் வர்த்தகத் துறைமுகம் அமைவதை இலங்கை தடுப்பதாகவும், இந்தியாவை மிரட்டுவதாகவும் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், நாகர்கோவிலில் நடந்த கன்னியாகுமரி வளர்ச்சி இயக்க கூட்டத்தில் நேற்று கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலகத்தில் உள்ள மிக முக்கியமான கடல் வழியாக இந்தியப் பெருங்கடல் இருக்கின்றது.

சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்குப் போகும் கப்பல்கள், இந்த வழியில் செல்கின்றன. இந்தக் கடல் வழியில் எந்த முக்கியத் துறைமுகமும் இல்லை.

நம் நாட்டிலிருந்து மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளுக்கு சரக்கு அனுப்ப, கொழும்பு அல்லது சிங்கப்பூர் துறைமுகங்களுக்கு சின்ன கப்பலில் அனுப்பி, அங்கிருந்து பெரிய கப்பல்களில் மாற்றி அனுப்ப வேண்டி இருக்கிறது.

இந்த நிலையில், கோவளம் முதல் மணக்குடி வரையிலான பகுதியில் 20 மீற்றர் மிதவை ஆழம் இருக்கிறது. இதன்மூலம் நம் சரக்குகளை உடனடியாக சர்வதேச நாடுகளுக்கு அனுப்ப முடியும்.

சர்வதேச கடல் வழிக்கு அருகில் கோவளம் பகுதியில் வர்த்தகத் துறைமுகம் அமைய இருக்கிறது. ஆனால் இந்தத் துறைமுகத்தை அமைக்க விடாமல் இலங்கை அரசு தடுக்கிறது.

நேரு பிரதமராக இருந்த போதே அப்போதைய இலங்கை பிரதமர் இங்கு துறைமுகம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தார். துறைமுகம் அமைத்தால் கொழும்பு துறைமுகத்துக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என அந்தத் திட்டத்தை ஒத்தி வைத்தார்கள்.

இப்போதும் நம் துறைமுகம் அமைக்கக் கூடாது என இலங்கை அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. இந்தியாவை மிரட்டுவதற்காக கொழும்பு துறைமுகத்தில் அமைக்கும் ஐந்தாவது கட்டத்தை சீனாவுக்குக் கொடுப்போம் எனக் கூறுகிறார்கள்.



அப்படி சீனா துறைமுகம் அமைத்தால் இந்தியாவுக்கு ஆபத்து. கொழும்பு துறைமுக ஐந்தாவது கட்டத்தை அமைக்க இந்தியாவுக்கு அனுமதி வழங்கவேண்டுமானால் கன்னியாகுமரியில் துறைமுகம் அமைக்கக் கூடாது என அழுத்தம் கொடுக்கிறார்கள்.

கேரள மாநிலமும் அவர்களது துறைமுகத்துக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால் குமரி மாவட்டத்தில் துறைமுகம் அமைவதை விரும்பவில்லை." என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு 19 தொழிற்சங்கங்கள் தீர்மானம்

(கொழும்பு)

சர்வதேச தொழிலாளர் தினமான மே மாதம் முதலாம் திகதி மே தினக் கூட்டங்களை நடத்துவதற்கு 19 தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதாக பொதுச் சொத்துக்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு சங்கத்தின் செயற்பாட்டாளர் சில்வெஸ்டர் ஜய கொடி தெரிவித்துள்ளார் இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மே முதலாம் திகதி மு.ப. 11 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக மேதினக் கூட்டங்கள் இடம்பெறும். அரசாங்கம் மே தினக் கூட்டங்களை மே மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளதை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினக் கூட்டங்களை நடத்துவதற்கு மைதானத்தைக் கோரி கொழும்பு மாநகர சபை ஆணையாளருக்கு கடிதமொன்றினை அனுப்பியிருந்தோம். எனினும் மாநகர சபை ஆணையாளர் மே முதலாம் திகதி மைதானத்தை தர முடியாது என தெரிவித்துள்ளார்.

அதற்கான காரணமாக மாநாயக்க தேரர்களின் வேண்டுகோளுக்கிணங்க சர்வதேச ரீதியில் மே மாதம் முதலாம் திகதி கொண்டாடப் படும் தொழிலாளர் தினத்தை மே மாதம் 7 ஆம் திகதி கொண்டாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே அத்தினத்தில் மைதானத்தை வழங்க முடியாது என்று தெரி வித்தார்.

எவ்வாறிருப்பினும் மாநாயக்க தேரர்களின் தேவைக்கேற்ப மே தினத்தை ஒத்தி வைப்பதாக இருந்தால் நாட்டில் அரசாங்கம் எதற்கு? இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு திட்டமிட்டபடி மே மாதம் முதலாம் திகதி மே தினத்தை அனுஷ்டிப்போம் என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.(இ-7)

# சதொச நிறுவனத்திற்கு ரூ.400கோடி வருமானம்

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் சதொச நிறுவனம் 400 கோடி ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதாக வணிக, கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் திருமதி இந்திக்கா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் நிறுவனம் ஈட்டிய அதிகூடுதலான வருமானம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் சதொச கிளைகள் மூலம் 40 சதவீத விலைக்கழிவு வழங்கப்பட்டது. இது வாடிக்கையாளர்களை கவர்ந்திழுக்க வழி வகுத்தது.

பண்டிகைக்காலத்தில் சதொச விற்பனை கிளைகள் முழுமையாக கூடுதலான நேரம் திறந்து வைக்கப்பட்டதாகவும் வாடிக்கையாளர்களுக்கிருந்த எதுவித முறைப்பாடும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# கற்றது கை மண்ணளவு



அது ஓர் அழகிய பனிக்காலம். ரவியும் சீதாவும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். இருவரும் ஒரே வகுப்பு. படிப்பில் கெட்டிக் காரர்கள். ஆனால் அவர்களுக் குள் அடிக்கடி விவாதங்கள் வருவதுண்டு. காரணம், அவர்களில் யார் பெரியவர் என்று. அதை நிரூபிக்க இருவரும் போட்டி போட்டுக் கொண்டு படிப்பதும் உண்டு.

அன்றும் அப்படித்தான் ரவியும் சீதாவும் பேசிக்கொண்டிருந்த போது, அவர்களுக்கிடையே விவாதம் முற்றியது.

ரவி சொன்னான், "நான் தான் உன்னை விட அறிவில் சிறந்தவன்" என்று. ஆனால் சீதாவோ அதை மறுத்தாள்.

"நிச்சயமா இல்லை! நான் தான்" என்றாள் ஆணித்தரமாக. அதற்குச் சான்றாக அவரவர் தங்கள் பிரதாபங்களை சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தனர். இதே ரீதியில் பேச்சு வளர்ந்து கொண்டிருந்தது.

அப்போது திடீரென அவர்கள் முன் தோன்றியது. ஓர் அழகிய தேவதை. தேவதையைக் கண்ட இருவரும் செய்வதறியாமல் திகைத்தனர். பின் இருவரும் சுதாரித்துக் கொண்டு, "நீங்கள் யார்?" என்றனர்.

தேவதை அவர்களிடம், "நான் தேவலோகத்து மங்கை. இந்த வழியாகத்தான் தினமும் பறந்து உலா செல்வேன்! இன்றும் அவ்வாறு போகும்போது உங்களது வாக்குவாதம் கேட்டது. பொறுக்க முடியாமல் இறங்கி வந்தேன்" என்றது.

பின், "உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்... முடிந்தால் தீர்த்து வைக்க முயற்சிக்கிறேன்" என்றது.

உடனே ரவி, "தேவதையே! இவளைவிட நான்தான் அறிவில் சிறந்தவன் என்றால் ஒத்துக்கொள்ள மாட்டேங்கிறா" என்றான். "ஒன்றும் கிடையாது! நான் தான் இவனை விட அறிவாளி!" என்று சீதா சொல்ல, ரவி மறுக்க, சூடான விவாதம் மீண்டும் தொடங்கியது.

இதைக் கண்ட தேவதை வருந்தியது. ஒரு கணம் யோசித்தது. "சரி, சரி! உங்கள் சண்டையை சற்று நிறுத்துங்கள். இதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்" என்று கூறியது. "உங்கள் இருவருக்கும் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறீர்களோ, அவர் தான் அறிவில் சிறந்தவர்" என்று கூறி, "உங்களுக்கு இதில் சம்மதமா?" என்று கேட்டது.

ரவியும் சீதாவும் "சம்மதம்" எனத் தலையாட்டினர். உடனே போட்டி என்ன என்பதை தேவதை அவர்களிடம் சொல்ல ஆரம்பித்தது. "நான் உங்கள் இருவருக் கும் ஆளுக்கு ஒரு குடுவை தரு கிறேன். இது பனிக்காலம் அல் லவா? அந்தக் குடுவையில் இரவு முழுவதும் பனித்துளிகளைச் சேமிக்க வேண்டும். இருவரில் யார் அதிகம் சேமிக்கிறீர்களோ அவர் தான் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்" என்று கூறியது.

"ஆனால் ஒரு நிபந்தனை, இத் தருணத்திலிருந்து போட்டி முடியும் வரை நீங்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்ளவோ பேசிக்கொள்ளவோ கூடாது. நான் நாளை மாலைதான் மீண்டும் வருவேன். இதே மைதானத்தில் எனக்காகக் காத்திருங்கள்" என்று கூறி, மூடியில்லாத இரு குடுவைகளை அவர்களிடம் கொடுத்து விட்டு மறைந்தது.

இருவரும் குடுவையுடன் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர்.

செங்கதிர் சூரியன் மறைந்து, பால் ஒளி வீசும் இரவு ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் பனியும் கொட்ட ஆரம்பித்தது.

ரவி குடுவையை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்கு வந்தான். திறந்த வெளியில் வைத்தான். பின் உறங்கச் சென்றான். ஆனால் உறக்கமே வரவில்லை. அடிக்கடி சென்று குடுவையில் பனித்துளிகள் சேர்ந்துள்ளதா? எனப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

சீதாவும் அவளது வீட்டின் முன்புறம் உள்ள புல்தரையில் குடுவையை வைத்தாள். இடையிடையே பனித்துளியின் அளவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "நாளை எப்படியாவது ரவியை ஜெயிக்கணும்" என்ற சிந்தனையிலேயே அவள் தூங்கிப்போனாள்.

(தொடரும்)




- 1534-இழ்சாக் கார்ட்டியே தனது கடற்பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தின் போதே அவர் கனடாவைக் கண்டுபிடித்தார்.
- 1653-ஒலிவர் குரொம்வெல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.
- 1657-அமெரிக்காவில் நியூ ஆம்ஸ்டர்டாம் (தற்போதைய நியூயோர்க் நகரம்) என்ற டச்சுக் குடியேற்றத்தில் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.
- 1926-திரைப்படத்துக்கு ஒலியை இணைக்கும் வைட்டாபோன் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1945- அடொல்ஃப் ஹிட்லர் கடைசித் தடவையாக தனது சுரங்க பதுங்கு இருப்பிடத்தில் இருந்து வெளியே வந்தார்.
- 1961- கியூபாவில் ஐக்கிய அமெரிக்காவின் பிக்ஸ் விரிகுடாத் தாக்குதல் தோல்வியில் முடிந்தது.
- 1972-அப்போலோ 16 சந்திரனில் இறங்கியது.

**பிறப்புகள்**

- 1808-பிரான்சின் மூன்றாம் நெப்போலியன், பிரான்சின் 1வது அரசுத்தலைவர் (இ. 1873)
- 1904-கே. சுப்பிரமணியம், தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் (இ. 1971)
- 1908-பழனி சுப்பிரமணியபிள்ளை, தமிழக மிருதங்க கலைஞர் (இ.1962)
- 1910-சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், தமிழக எழுத்தாளர் (இ. 2006)
- 1923-சாரணபாசுகரன், தமிழகக் கவிஞர், இதழாளர் (இ. 1986)
- 1939-பிரமீள், ஈழத்து எழுத்தாளர் (இ. 1997)
- 1939-குரோ ஆர்லம் புருண்ட்லாண்ட், நோர்வேயின் 22வது பிரதமர்
- 1942-இலந்தை சு. இராமசாமி, தமிழகக் கவிஞர், கட்டுரையாளர், சொற்பொழிவாளர்
- 1945-தெய்ன் செய்ன், பர்மாவின் 8வது அரசுத் தலைவர்
- 1947-அன்வர் இப்ராகீம், மலேசிய அரசியல்வாதி
- 1950-நா. சந்திரபாபு, ஆந்திராவின் 13வது ஆந்திரப் பிரதேச முதலமைச்சர்களின் பட்டியல்

**இறப்புகள்**

- 1786-ஜான் குட்ரிக், ஆங்கிலேய வானியலாளர் (பி. 1764)
- 1918-கார்ல் பெர்டினாண்ட் பிரவுன்,நோபல் பரிசு பெற்ற செருமானிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1850)
- 1955-திருக்கண்ணபுரம் விஜயராகவன், தமிழகக் கணிதவியலாளர் (பி. 1902)
- 1980-ம. கனகரத்தினம், இலங்கை அரசியல்வாதி (பி. 1924)
- 2000-பிலிப் சைல்சு கீனான், அமெரிக்க வானியலாளர், கதிர்நிரலியலாளர் (பி. 1908)
- 2004-ராஜ ஸ்ரீகாந்தன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1948)
- 2008-மரியாம்பிள்ளை சேவியர் கருணாரத்தினம், இலங்கைத் தமிழ், கத்தோலிக்க மதகுரு, மனித உரிமைச் செயற்பாட்டாளர் (பி. 1951)
- 2011-ர.சு. நல்லபெருமாள், தமிழக எழுத்தாளர்
- 2012-சண்முகம் சிவலிங்கம், ஈழத்துக் கவிஞர் (பி. 1936)

**சிறப்பு நாள்**

- ஐ.நா. சீன மொழி நாள் (ஐக்கிய நாடுகள்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 75 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 30 | 40 | 50 | 40 | 60 | 30 |
| தக்காளி | 30 | 30 | 30 | 20 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 | 30 | 50 | 70 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 20 | 30 | 15 | 40 | 50 |
| புடோல் | 80 | 60 | 60 | 25 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 35 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 160 | 180 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 60 | 52 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 150 | 100 | 35 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 40 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | — | 80 | 60 |
| பயற்றங்காய் | 80 | 80 | 80 | 35 | 60 | 80 |
| லீக்ஸ் | 160 | 200 | 200 | 110 | 240 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 40 | 10 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 60 | 20 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 250 | 180 | 240 | 500 |
| போஞ்சி | 100 | 120 | 100 | — | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 50 | — | 50 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 20 | 30 | 35 |
| தேசிக்காய் | 240 | 250 | 240 | 200 | 200 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 30-80 | 60-75 | 80 |
| இராசவள்ளி | 180 | 200 | 160 | — | 160 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | — | 50 | 20 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 60 | 50 | — | 80 | — |

மனிதன் சுதந்திரத்தோடு பிறக்கிறான். ஆனால் எங்கும் அடிமைத்தளையில் பிணைப்புண்டு கிடக்கிறான். - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யுத்தம் இல்லை என்றால் அது நல்லிணக்கமா?

மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டனில் கூறியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டுக்காக லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மீண்டும் யுத்தம் ஏற்படாதவகையில் சகல இனங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதானது சிங்கள ஆட்சியாளர்களின் நினைப்பு எவ்வாறாக உள்ளதென்பதை பட்டவர்த்தனமாக தெளிவுபடுத்தியுள்ளது.

நாட்டில் யுத்தம் இல்லையென்றால் அது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பதே அவர்களின் பார்வையாகவுள்ளது.

ஆனால் நாட்டில் எந்தவகையிலும் நல்லிணக்கம் ஏற்படவில்லை என்பதே உண்மை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பலமாக இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேசத்தின் உதவியுடன் இலங்கை ஆட்சியாளர்கள் இல்லாது செய்து விட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர்.

தமிழர் தாயகம் முழுவதும் படையினரின் களமாக மாற்றப்பட்டுள்ளது.

காணாமல்போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் என்ற ஒரு பெரும் துன்பப் பட்டியல் தமிழினத்தை வாழமுடியாதவர்களாக ஆக்கியது.

இதனிடையே காணாமல்போனவர்களின் உறவுகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு வருடம் கடந்து விட்டது.

தவிர, படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது சொந்த நிலத்தை மீட்டெடுப்பதற்காகத் தமிழ் மக்கள் நடத்தும் தொடர் போராட்டம் இன்னும் நீண்டு செல்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பது எந்த வகையில் நியாயமானதென்பதை சர்வதேச சமூகம்தான் தீர்மானிக்க வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் நாட்டில் நிலவுகின்ற அமைதியை தவறான கற்பிதத்திற்குள் யார் கொண்டுவர நினைத்தாலும் அதன்விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

இலங்கையில் தமிழ் மக்கள் அடக்கப்பட்டுள்ளனர். ஆயுதம் தரித்த படையினர் அவர்களைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

தமிழர் தாயகத்தில் தரையிலும் வானத்திலும் கடலிலும் சஞ்சரிக்கும் படையினரின் முழு நோக்கமும் தமிழ் மக்களை எந்நேரமும் அச்ச நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பது தான்.

கோயில் கட்டிடமென்றால் கூட அங்கு புலனாய்வுத்துறை வந்து விடுமளவில்தான் தமிழரின் வாழ்வியல் அமைந்திருக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், ஜனாதிபதி அவர்கள் லண்டனில் கூறிய நல்லிணக்கத்தைக் கேட்கும்போதெல்லாம் தலைவெடித்துப் போகும்போல் உள்ளது.

### 'உணவு வீண்விரயத்தை தடுக்க வேண்டும்'

# வவுனியாவிலிருந்து யாழ்.நோக்கி விழிப்புணர்வு வாகனப் பேரணி

(பனிக்கன்குளம்)

"உணவு வீண்விரயத்தினை தடுக்க வேண்டும்" எனும் தொனிப்பொருளில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி விண்மீன்கள் அமைப்பினரால் விழிப்புணர்வு வாகனப் பேரணியொன்று இடம்பெறவுள்ளதாக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உணவு வீண்விரயம் ஆகுவதை தடுக்கும் நோக்குடன் விண்மீன்கள் அமைப்பை உருவாக்கி இல்ல, பொது நிகழ்வுகளில் மேலதிகமாகவுள்ள உணவுகளை பெற்று மக்களுக்கு வழங்கி வருகின்றோம்.

இந்த நிலையில் முழுமையாக உணவு வீண்விரயமாவதைத் தடுக்கும் நோக்குடனும் மக்களுக்கு உணவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்குடனும் "விண்மீன்களின் விழிப்புணர்வு நகர்வலத்துடன் கையெழுத்திடும் நிகழ்வு" 21,22,23 ஆகிய தினங்களில் நடைபெறுவதுடன் வவுனியாவிலிருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணம் ஊடாக பருத்தித்துறை நோக்கி பயணிக்கவுள்ளது.

வாகன பேரணி செல்லும் சமயத்தில் நீங்களும் இந் நிகழ்வில் பங்களிப்பு செய்வதுடன் கையெழுத்து வேட்டையிலும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

"உணவு வீண்விரயத்தினை தடுக்க வேண்டும்" என்ற தொனிப் பொருளில் உருவாக்கப்பட்ட விளம்பர பதாகைகளை தாங்கிய எமது விளம்பர வாகன பேரணியின் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 8.00 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பேரணியானது ஏ9 வீதியூடாக நகர்ந்து ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம், முருகண்டி, இரணைமடு ஊடாக அன்றையதினம் மாலை கிளிநொச்சி நகரத்தை சென்றடையவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 22ஆம் திகதி காலை 8 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகி தொடர்ந்து ஏ9 வீதியூடாக பரந்தன், இயக்கச்சி, பளை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஊடாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தை சென்றடையவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பாகி யாழ்.மத்திய பேருந்து நிலையம், நாச்சிமார் கோவிலடி, நல்லூரடி, திருநெல்வேலி, மருதனார் மடம், கோப்பாய், புத்தூர், நெல்லியடி, மந்திகை ஊடாக பருத்தித்துறை நகரை சென்றடைந்து பேரணி நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன.

இதனூடாக சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களின் பிரதிகள் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களிடம் கையளிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

## விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றார் பைசர் முஸ்தபா

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சராக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்றைய தினம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.


முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அண்மையில் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்திருந்த நிலையில் பதில் அமைச்சராக பைஸர் முஸ்தபா நியமிக்கப்பட்டிருந்தார்.

கொழும்பிலுள்ள விளையாட்டுத்துறை அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவும் கலந்து கொண்டார்.

பைசர் முஸ்தபாவுக்கு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுடன் மேலதிகமாக தற்போது விளையாட்டுத்துறை அமைச்சு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில சண்டிலிப்பாய், சீரணி, ஆலங்குழாய் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் நாச்சிக்குடாவிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், செம்மண்தீவு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இறையின் முகங்கள்

நஙகள பல முகஙகளை உடையவா. ஆனால நஙகளதான அவறறை நேருககு நேராகப பாாபபதிலலை. உங்களுடைய முகங்களை நீங்கள் நேருக்கு நேராகப் பார்க்கும் போது முரண்பாடுகள், குழப்பம், (ஊஉமுயுளு) தாறுமாறுகள் உள்ளங்களில் எழுகின்றன.

காலத்திற்குக் காலம் பல தோற்றங்களில் பல முகங்கள் காணப்படுகின்றன. நீங்கள் உங்களுடைய ஆனமாவிறகு நெருககமாக வருமபோது எலலா முகஙகளும இருநத இடம தெரியாமல போய விடுகினறன. நஙகள எநதப பெருவெளியாக உளளாகளோ அநதப பெருவெளியாக உங்களைக் காட்டுகிறது.

தூல உடல் மட்டத்தில் நீங்கள் உங்களை இன்னார் என்று அடையாளம் காட்டுகிறீர்கள்.

சூட்சும மட்டத்தை நெருங்கிச் செல்லச் செல்ல நீங்கள் ஏதோ ஒரு ஆற்றலாகவோ, ஏதோ தேவதை, மகான் உங்களில் திருப்பிறவியெடுத்திருப்பது போன்றோ உங்களை அடையரளம் காட்டலாம்.

இநத நிலைககும அபபால போகும போது நஙகள முழுமை அடைகிறாகள. புனிதன- பூரண பிரமமன நாராயணா.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபெருமானின் எளிய தோற்றத்தில் புதைந்துள்ள வாழ்வியல் கருத்துக்கள்

**உடுக்கை**

சிவபெருமானின் உடுக்கையின் மூலமாக, உங்கள் உடலின் அனைத்து எண்ணங்களையும் ஒருமுகமாக செயறபடுத்தும் போது, உங்கள் உடல் சுத்தமாகி, நோயினறி வாழ உதவுகிறது எனபதே ஆகும.

**கங்கை**

சிவபெருமானின தலையில இருககும கஙகை நமக்கு உணர்த்துவது, உங்களது அறியாமையின் முடிவில் ஒரு தேடல் பிறக்கிறது. அந்த தேடலில் இருந்து தான் உங்களுக்கான புதிய வழி தென்படுகிறது என்பதே ஆகும்.

**கமண்டலம்**

சிவபெருமானின் கமண்டலம் மூலம் நம் அறிய வேண்டியது, நமது உடலில் இருந்து தீய எண்ணங்களையும், எதிர்மறை எண்ணங்களையும் தவிர்த்தோம எனறால நாம நலல நிலையை எடட முடியும எனபதே ஆகும.

**நாகம்**

சிவபெருமானின் கழுத்தை சுற்றி இருக்கும் நாகம் மூலமாக நாம் உணர வேண்டியது, நம்முள் இருக்கும் "நான்" எனும் அகங்காரத்தை விட்டுவிட்டால், உங்கள் மனநிலையும் மற்றும் உடல்நிலையும் மேலோங்கும் என்பதே ஆகும். (முற்றும்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### ஆடை விடயத்தில் கவனம்

✦ விருந்தினர் வீட்டில் நுழைந்தால், மனங்கோணாமல் மகிழ்ச்சி அடையுங்கள். ஏனென்றால் அவர்களுடைய உணவை அவரகளே கொணடு வருகிறாரகள.

✦ பெருமைக்காக ஆடை அணிகின்றவருக்கு வாழ்வில் வறுமை உண்டாகும்.

✦ எல்லோரும் ஒன்று கூடி உண்ணுங்கள். பிரிந்து விடாதரகள.ஒனறுகூடி இருபபதில தான "பரகத" இருக்கிறது.

✦ நீங்கள் இரவில் பட்டினியாக இருக்காதீர்கள். பட்டினி இருப்பதால் விரைவில் உங்களுக்கு முதுமை தடடிவிடும.

✦ உணவுப் பண்டங்களை பதுக்காமல் மக்கள் தேவைக்கு விற்பனை செய்யும் வியாபாரி அல்லாஹ்வின் பேரருளைப் பெற்றவராவார்.

✦ நாவு நேர்மையாக இருக்குமானால் ஒருவனுடைய இதயம் நேர்மையான வழியில் செல்லும்.

✦ பழித்துரைத்தல், ஒழுக்கம் கெட்ட முரட்டுத்தனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும.

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் அடுத்த சுற்றில் ஓல்ட்கோல்ஸ்

கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்திற்காக வெள்ளி விழா தொடரின் 8 வது போட்டி கடந்த வெள்ளிக்கிழமையன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்ற போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி திருநெல்வேலி YMHA அணியை 186 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது. நிமலேண்டிரன்-23, சிறிகுகன்-45, பிரியலக்ஸன்-28, மதூஸன்-17, குகன்-41, எம்.மதூஸன்-10, சீராளன் ஆட்டமிழக்காது-50 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் திருநெல்வேலி YMHA சார்பாக அருண்ராஜ்-3, டிசாந்தன்-02, ருசாந்த்-01, சுபாஸ்கரன்-02, சுதாகரன்-01 இலக்கினை கைப்பற்றினர். 257 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய திருநெல்வேலி YMHA அணி 15.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றனர். சுதாகரன்-20, சுதர்ஸன்-12 ஓட்டங்களை பெற்றனர். களத் தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணி சார்பாக வின்துஸன்-4, சிறிகுகன்-3, நிரோஸன், மாதவரூபன் நிமவேந்திரா தலா-1 இலக்கினை கைப் பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (தரவரிசை பட்டியல்) ஓல்ட் கோல்ஸ் அணி 8.42 புள்ளிகளையும் திருநெல்வேலி YMHA அணி 1.60 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (கு)



இருபாலை கற்பகாஸ் விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 24 அணிகள் பங்குபற்றிய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் பருத்தித்துறை உபய கதிர்காமம் விளையாட்டுக் கழகமும், பருத்தித்துறை மாதனை விளையாட்டுக் கழகமும் மோதின. இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற உபய கதிர்காமம் விளையாட்டுக் கழகம் முதல் பரிசான 10 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் வெற்றிக் கிண்ணத்தையும் தட்டிச் சென்றது. இரண்டாம் பரிசான 5 ஆயிரம் ரூபா பணப்பரிசை மாதனை விளையாட்டுக்கழகம் பெற்றிருந்தது. (க)

# இதற்காகவா இவர்களை ஏலம் எடுத்தீர்கள் இராஜஸ்தான் றோயல் அணியை கலாய்த்த ரசிகர்கள்

கொல்கத்தா அணிக்கெதிரான போட்டியில் ஸ்டோக்ஸ் மற்றும் உடன்கட்டின் ஆட்டத்தைக் கண்டு ரசிகர்கள் வெறுப்படைந்துள்ளனர்.

ஐ.பி.எல். தொடரின் 15 ஆவது லீக் போட்டியில் ரகானே தலைமையிலான ராஜஸ்தான் அணியும், தினேஷ்கார்த்திக் தலைமையிலான கொல்கத்தா அணியும் மோதின. இப்போட்டியில் ராஜஸ்தான் அணி நிர்ணயித்த 160 ஓட்டங்களை கொல்கத்தா அணி 18.5 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசால்டாக வெற்றி பெற்றது.

இந்நிலையில் ராஜஸ்தான் அணி இந்திய அணியின் பந்து வீச்சாளரான உடன்கட்டை 11.5 கோடிக்கும், இங்கிலாந்து அணியின் ஆல்ரவுண்டரான பென் ஸ்டோக்சை 12.5 கோடிக்கும் ஏலம் எடுத்தது குறித்து ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஐ.பி.எல். துவக்கத்தில் இருந்தே



உடன்கட்டின் பந்து வீச்சு அந்தளவிற்கு இல்லை. அதேபோன்று சென்ற ஆண்டு புனே அணிக்காக ஆரம்பத்தில் இருந்தே அதிரடி காட்டிய பென் ஸ்டோக்ஸ் இந்தாண்டு இன்னும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவே இல்லை.

முடிந்த போட்டியில் பென் ஸ்டோக்ஸ் 11 பந்துக்கு 14 ஓட்டங்கள் எடுத்ததுடன், 3 ஓவர் வீசி 25 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து விக்கெட் எதுவும் வீழ்த்தாமல் ஏமாற்றினார்.

அதேபோன்று நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உடன்கட் 3 ஓவர் வீசி 34 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

இதனால் ரசிகர்கள் ராஜஸ்தான் அணியில் ஒரு பேட்டிங் ஆர்டர் சரியில்லை, பந்து வீச்சில் ஒன்றும் இல்லை. தென்னாபிரிக்க வீரரான Heinrich klaasen-ஐ ஏன் எடுத்தீர்கள். அவரை விளையாட வைக்க வேண்டியது தானே என்று கடும் கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். (க)

# சிறுவயதில் தெருவோரம் நிலக்கடலை விற்றேன் சென்னை அணிவீரர் உருக்கம்

சிறு வயதில் தெருவில் அமர்ந்து நிலக்கடலை விற்று அதில் கிடைக்கும் வருவாயை எனது தாயிடம் கொடுப்பதில் எனக்கு பெருமகிழ்ச்சி கிடைத்தது என சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் கூறியுள்ளார். லுங்கிசனி கிடி சென்னை அணியால் 50 இலட்சம் கொடுத்து ஏலம் எடுக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இவருக்கு 21 வயது தான் ஆகிறது. இவர் மிகவும் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் ஆவார். இந்திய அணி தென்னாபிரிக்காவிற்குச் சென்ற போது இவர் விளையாடுவது பிடித்து டோனி இவரை அணியில் எடுக்கச் சொல்லி இருக்கிறார். அதன் காரணமாகவே அவருக்கு இந்த திடீர் வாய்ப்புக் கிடைத்தது.

வேகப்பந்து வீச்சாளர்கள் எல்லோரும் சரியாக பந்து வீசுவதால் இப்போது லுங்கியின் தேவை குறைந்துள்ளது. தீபக் சாஹர் அணியில் விளையாடாத பட்சத்தில் லுங்கி அணியில் எடுக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. இவர் தனது சிறுவயது குறித்து பகிர்ந்து கொண்டதாவது.

சிறு வயதில் தன்னுடைய தம்பியுடன் சேர்ந்து வீதி ஓரத்தில் நிலக்கடலை விற்றதாக கூறியுள்ளார். அதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றுள்ளார். அந்தப் பணத்தை அம்மாவிடம் கொடுப்போம் என்று கூறியுள்ளார்.

அவருடைய தந்தை சென்ற வாரம் மரணம் அடைந்துவிட்டார். இதற்காக லுங்கி தற்போது தென்னாபிரிக்கா சென்றுள்ளார். அவர் இன்னும் ஒரு வாரத்திற்கு பின் வந்து சென்னை அணியின் இணைவார். (க)



# உலகக் கிண்ணத்தில் ஆடுவேன் நட்சத்திர வீரர் நெய்மர்



ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்குள் முழுமையாக தயாராகி விடுவேன் என, பிரேசில் கால்பந்து அணி வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார்.

பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் நெய்மர், கடந்த பெப்ரவரி மாதம் கிளப் போட்டி ஒன்றில் விளையாடிய போது காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து, அவருக்கு காலில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது காயத்திலிருந்து குணமடைந்து வரும் நெய்மர் கூறுகையில், 'காயம் மோசமானது தான். ஆனால், தற்போது ஓய்வு எடுத்து வருவதால் தேறி வருகிறேன்.

ரஷ்யாவில் ஜூன் மாதம் தொடங்கும் உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்குள் நான் முழுமையாக தயாராகி விடுவேன்' என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் மே 21 ஆம் திகதி தொடங்கும் தேசிய அணிக்கான பயிற்சி முகாமில் நெய்மர் பங்கேற்பார் எனக் கூறப்படுகிறது. நெய்மர் பாரீஸ் செயண்ட் ஜேர்மைன் எனும் கிளப் அணிக்காக விளையாடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரபல மல்யுத்த வீரர் மரணம் விளையாட்டு உலகம் இரங்கல்



பிரபல WWE மல்யுத்த ஜாம்பவான் ப்ரூனோ சமர்டினோ தனது 82ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

இத்தாலியில் பிறந்த ப்ரூனோ மல்யுத்த போட்டிகளில் பல்வேறு சம்பியன்ஷிப் பட்டங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

ப்ரூனோ கடந்த 1981 ஆம் ஆண்டு மல்யுத்த போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் பின்னர் வர்ணனையாளராக தொடர்ந்து பணியாற்றி வந்தார். ப்ரூனோவின் மறைவுக்கு WWE நிறுவனம் தனது இரங்கலை வெளிப்படுத்தியுள்ள நிலையில் சக மல்யுத்த வீரர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதோடு பிரபல நடிகர் அர்னால்டும், ப்ரூனோ ஒரு ஜாம்பவான் என டுவிட்டரில் புகழாரம் சூட்டியுள்ளார். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## குழந்தை மருத்துவ...

போதிலும், குழந்தை மருத்துவ நிபுணரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே உடனடியாக குழந்தை மருத்துவ நிபுணரை நியமிக்குமாறு கோரி கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 8.30 மணியில் இருந்து 11 மணிவரை நடைபெற்றிருந்தது. இப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "உங்கள் சில நொடி தவறுகள் எங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை கண்ணீராக்கின்றது", "பெற்றோரின் கனவுகள் மண்ணுக்குள் புதைப்பது ஏன்" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் இக் கவனயீர்ப்பு தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அதிகமான கிராமங்களை சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் தெல்லிப்பழை வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து குழந்தை வைத்திய நிபுணர் நியமிக்கப்படவில்லை. இதனாலேயே 12 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளார்கள்.

அவ்வாறு குழந்தைகளை இழந்த தாய்மார்கள் மன அழுத்தத்தினால் மனநலம் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே இவ் வைத்தியசாலைக்கு குழந்தை வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். மேலும் இவ் வைத்தியசாலைக்கு வவுனியாவில் இருந்து வருவதற்கு ஒரு வைத்தியர் சம்மதம் தெரிவித்திருந்த போதும் வடமாகாண சுகாதார அமைச்சர் அவரை மன்னாருக்கு நியமித்துள்ளார். இந்நிலையில் வடமாகாண சுகாதார அமைச்சர் நினைத்தாலேயே இப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றனர்.

எனினும் இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் எஸ்.குணசீலனை தொடர்பு கொண்டு கேட்டபோது, மன்னாருக்கு அவ்வாறு யாரையும் நியமிக்கவில்லை எனவும், வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் குழந்தை மருத்துவ நிபுணர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். எனினும் அவ்வாறு அவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வருவது என்றால் அவருடைய இடத்திற்கு பிறிதொரு மருத்துவ நிபுணர் வர வேண்டும், அந்த மருத்துவ நிபுணர் வெளி மாவட்டத்திலிருந்தே வர வேண்டும். ஆகையால் அவர் வராமல் மற்றொருவரை விடுவிக்க முடியாது. எனவே தான் தெல்லிப்பழை வைத்தியாலைக்கு அவரை கொண்டுவர முடியவில்லை. எனினும் மாற்றீடாக ஒரு நிபுணரை வவுனியாவிற்கு நியமித்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு குறித்த வைத்தியரை கொண்டுவர தொடர்ந்து முயற்சித்து வருகின்றோம் என்றார். இதனை வைத்தியசாலை தரப்பும் உறுதிப்படுத்தியிருந்தது. (ம-4)

## வட மாகாண அமைச்சு...

வேண்டும் என மாகாண கல்வி அமைச்சரும், பதில் முதலமைச்சருமான சர்வேஸ்வரன் வலியுறுத்தினார்.

ஆனால், மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மோகனதாஸ் மாற்றப்படுவதுடன், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகவும், பயிற்சி முகாமைத்துவத்துக்கு பொறுப்பாகவும் தெய்வேந்திரன் நியமிக்கப்படுவார் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நியமனத்தை ஏற்க மறுத்த பதில் முதலமைச்சர், தம்மால் பரிந்துரைக்கப்படுபவர்களை மட்டுமே செயலாளர்களாக நியமிக்க முடியும் என கூறியுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

முரண்பாட்டை தொடர்ந்து இந்தியா சென்றுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை உடனடியாக தொலைபேசியில் தொடர்புகொண்ட பதில் முதலமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரன் நியமிக்கப்படாவிடின், அனைத்து நியமனங்களையும் உடன் நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

அதனையடுத்து ஆளுநரால் நேற்று வழங்கப்படவிருந்த செயலாளர் மாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளன. (ம)

## ஜனாதிபதியும் பிரதம...

பார்கள் என பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டை கொண்டாடும் முகமாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாகவோ அல்லது மக்களுக்கு மானியமுறையில் சலுகை வழங்கும் நிறுவனமாகவோ இருக்க எந்த அரசாங்கமும் தீர்மானம் எடுக்கவில்லை.

ஆனால் இது தொடர்பாக அரசாங்கம் விரைவாக ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். இன்று எல்லோரும் எரிபொருள் விலை கூடுமா, இல்லையா என அதிகம் பேசுகின்றனர்.

நிதி அமைச்சு அதிகாரிகளும் இது தொடர்பாக எம்முடன் கலந்துடையாடி வருகின்றனர். எனினும் விலை மாற்றம் தொடர்பாக அரசாங்கமே தீர்மானம் எடுக்கும். இது தொடர்பாக அமைச்சரவை, பிரதமர் மற்றும் ஜனாதிபதியே முக்கிய முடிவை எடுப்பார்கள் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)

## உறவினை மேம்படுத்த...

இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் நீண்டகாலமாக நல்லுறவு இருக்கிறது.

தற்போது நாட்டில் சில பொருளாதார மற்றும் இதர பிரச்சினைகள் உள்ளன.

அவை தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## பிரச்சினைகளை தீர்த்து...

கண்டி தலதா மாளிகைக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர், அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மஹாநாயக்கர்களை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த வருடத்தைப்போல துரதிர்ஷ்டவசமான காலமாக இல்லாமல் நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின் பலன்கள் கிடைக்கும் காலமே இது. இன்னும் சில செயற்பாடுகளை நாம் துரிதமாக முடிக்க வேண்டும். ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அரசாங்கத்தின் புதிய செயற்பாடுகளை நாம் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார். (ம)

## பேண்தகு எதிர்காலத்தை...

றின் அரச தலைவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் இந்த நிறைவேற்று சபையில் பொதுநலவாய அமைப்பின் பசுமை பிரகடனமும் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஒரு தீவு என்ற வகையில் எதிர்கால சந்ததியினரின் பயன்பாட்டிற்காக எமது நிலப்பரப்பு, காடுகள், ஆறுகள் மற்றும் சமுத்திரம் என்பவற்றுடன் பேண்தகு எதிர்காலத்தை உறுதி செய்தல் தொடர்பாக இலங்கை மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

பூகோள ரீதியில் இலங்கை கேந்திர முக்கியத்துவமுடைய மையப் புள்ளியில் அமைந்துள்ளதுடன், உலகின் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார சக்தியாக ஆசிய நாடுகளே உருவெடுத்து வரும் இந்த சந்தர்ப்பத்தில் எமது நாடும் தனது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் அமைவிடம் காரணமாக பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்களினால் வருமானம் ஈட்டக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றது என ஜனாதிபதி தெரிவித்தார்.

வறுமையை இல்லாதொழித்தல், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல், சமத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்தி போன்ற இலக்குகளை அடைவதற்காக எமது மக்களுக்கு கடல்சார்ந்த சூழலில் இருந்து அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் நிரந்தரமான, பேண்தகு எதிர்காலத்தை அடைவதற்கான மார்க்கம் இதுவாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய இராச்சியத்தினால் முன்மொழியப்பட்டுள்ள தூய்மையான சமுத்திரங்களுக்கான ஒப்பந்தத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், இந்த பின்னணியில் பொதுநலவாய அமைப்பின் பசுமை பிரகடனத்தை

நாம், சமுத்திரங்கள் சகலருக்கும் பொதுவான பொறுப்பும் மரபுரிமையும் ஆகும் என்றவகையில் அதனை எமது ஒன்றிணைந்த முயற்சியினால் பாதுகாக்க வேண்டும் என்பதனால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றோம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அனைவரையும் ஒன்றிணைத்து நம்பகரமான வழிமுறைகளினூடாக இணைந்து செயற்பட்டு முன்னோக்கி பயணிக்கவும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளவும் கூடிய இலக்குகளை அடைதலே பேண்தகு எதிர்காலத்திற்கான இலக்காகும் என தெரிவித்தார்.

பொதுநலவாய அமைப்பு இது தொடர்பாக பரஸ்பர நன்மை பயக்கத்தக்க புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான பின்னணியை வழங்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## எழுதப்படாத ஒப்பந்தம்...

யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளை கூட்டமைப்பு எடுத்துக்கொள்வதெனவும் தீவகத்திலுள்ள மூன்று சபைகளையும் ஈபிடிபிக்கு விட்டுக்கொடுப்பதெனவும் எழுதப்படாத ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. வட மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இத்தகைய வாக்குறுதிகளை வழங்கியதாக ஈபிடிபி அமைப்பின் யாழ்.மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுற்ற பின்னர் வாக்குகள் எண்ணும் பணிகள் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்பொழுது வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் இத்தகைய வாக்குறுதிகளை வழங்கினர். கடந்த கால பகைகளை மறக்க அவர்கள் கோரியிருந்தனர்.

சாவகச்சேரி நகரசபையில் எமது ஆதரவை பெற்ற பின்னர் மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் இதையே கூறியிருந்தார். ஆனால் அதனையெல்லாம் மறந்து நாம் ரத்தம் சிந்திய தீவகப்பகுதிகளை கைப்பற்ற எமக்கு எதிராக அவர்கள் களமிறங்கியதாகவும் மேலும் அவர் தெரிவித்தார். ஆனால் அதற்காக கூட்டமைப்புடன் நாம் பகைமை காட்டப்போவதில்லை. மக்களிற்கான சேவைகளை ஆற்ற ஒத்துழைப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே தமக்கு ஆதரவு கேட்டு ஈபிடிபியுடன் கூட்டமைப்பினர் எவரும் பேசவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளாரேயென்ற கேள்விக்கு பதிலளித்த அவர், நாம் தேவையாயின் எமது கட்சியின் செயலாளர் டக்ளஸின் தொலைபேசி மாதாந்த சிட்டையை காட்டத்தயார். வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் என பலர் பேசியிருந்தனர்.

ஒவ்வொருவரும் நாட்கணக்கில் மாறி மாறி பேசிக்கொண்டேயிருந்தனர். எமது உறுப்பினரான முடியப்பு றெமீடியஸ் வீட்டிற்கு தான் தேடி நேரே வரவாவென எம்.ஏ.சுமந்திரன் கேட்டார். றெமீடியஸ் மறுத்துவிட்டார். எங்களிடமும் பலரும் தொடர்ந்தும் உதவி கேட்டு தொலைபேசி வழியே அழைத்தனர். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் நாடாளுமன்றில் நேரடியாக இவர்கள் உதவி கேட்டனர். கூட்டமைப்பினருக்கு சபைகளை கைப்பற்ற நாம் தேவை. ஆனால் மக்களிடம் ஈபிடிபியிடம் ஆதரவு கேட்டமை பற்றி தெரியக்கூடாதென இரட்டை வேடம் போடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இப்பத்திரிகையாளர் சந்திப்பில் மற்றொரு உறுப்பினர் ஜீவனும் பங்கெடுத்திருந்தார். (ம-4)

## ஜனாதிபதி மைத்திரியை...

லண்டனில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு தற்போது நடைபெற்று வரும் மண்டபத்துக்கு எதிரே இந்த ஆர்ப்பாட்டத்தை புலம்பெயர் உறவுகள் முன்னெடுத்துள்ளனர்.

தமிழினப் படுகொலைக்கு நீதிவேண்டும், தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகும், தனிநாடே தமிழருக்கான தீர்வு, தனிநாட்டுக்கான வாக்கெடுப்புக்கு தமிழர்கள் தயார், இனவழிப்புச் செய்த இலங்கையைப் பாதுகாப்பதை ஐ.நாவே நிறுத்து, ஐ.நா தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் போரின் போது கொல்லப்பட்ட பொது மக்களின் ஒளிப்படங்களின் பதாகைகளையும் தாங்கியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம் என சித்தரித்து தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## படையினரால்...

சிங்கள மக்கள் கேப்பாப்பிலவில் போராடும் மக்களை சந்திக்கச் சென்றுள்ளனர்.

எனினும் இதற்கு படையினர் அனுமதி வழங்காததுடன், அவர்களை விரட்டியடித்துள்ளனர் என கேப்பாப்பிலவு போராட்டத்திற்கு தலைமை தாங்கும் ஆறுமுகம் வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

தமது போராட்டத்தின் நியாயத்தை அறிந்து கொண்டு எமக்கு ஆதரவாக செயற்படவும், எமது துயரங்களை அறிந்து கொள்ளவும் வந்த சிங்கள இளைஞர்களை படையினர் விரட்டியடித்ததால் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கவலையடைந்துள்ளதுடன் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம)

## இரு இளைஞர்கள்...

மற்றும் 33 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு சந்தேக நபர்களும் இராணி சந்தியில் தற்காலிக கடை ஒன்றில் ஆடை தைப்பு தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் ஆடை தைப்பு தொழிலுக்கு மேலதிகமாக போதைப்பொருட்களை தூர பகுதிகளிலிருந்து கொண்டு வந்து இளைஞர்களுக்கு விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## கொழும்பு ஹொரணை...

நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பின் புறநகர் பகுதியான ஹொரணை பெல்லபிட்டி பகுதியிலுள்ள இறப்பர் தொழிற்சாலையில் நேற்று பிற்பகல் திடீர் தீ வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொழிற்சாலையில் உள்ள அமோனியா அமிலம் அடங்கிய குழியை சுத்தம் செய்வதற்காக சென்ற ஊழியர் ஒருவர் அந்தக் குழிக்குள் விழுந்துள்ளார்.

இதனையடுத்து அவரை காப்பாற்றுவதற்காக சென்ற பிரதேச மக்கள் நச்சு வாயுவை சுவாசித்துள்ளதால் பாதிப்படைந்துள்ளதுடன், 16 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தொழிற்சாலையில் தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை கடைப்பிடிக்காமையால் ஊழியரின் உயிரிழப்புக்கு காரணமாகிய குற்றச்சாட்டின் பேரில் முகாமையாளரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட முகாமையாளரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## வெறும் 30,000/- உடன்
3 முதல் 6 மாத கற்கைநெறியுடன்

சிங்கப்பூர் ஹொட்டேல் வேலைவாய்ப்பு | உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு
டுபாய், கட்டார், குவைத் ஹொட்டேல் வேலைவாய்ப்பு | சுவிஸ், நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா விசா
ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளுடன்

10ம் அணி TOURISM & Hotel Management
Entry Level with FREE ENGLISH COURSE
4 MONTHS DURATION
கற்கைநெறி ஆரம்பம் ஏப்ரல் 25 புதன்கிழமை
பதிவுகளுக்கு 0777 324 004

9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk

## வலையின் வெளியீடு
வடமாகாண (MA) வழிகாட்டி வெளிவந்துவிட்டது
அத்துடன்
முன்பள்ளி ஆசிரியர் தரம்III சாரதி தரம்III வழிகாட்டிகளும் விற்பனையாகிறது.
யாழ். நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட வட மாகாணத்தின் முன்னணி புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொகுப்பு
சி.என்.எச். சாள்ஸ்
0776913337

## விசேட கருத்தரங்கு
வவுனியாவில்
முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை (MA)
21/04/2018 9A.M - 4P.M
இடம் :- காமனி மகா வித்தியாலயம்
P.கமல்தாசன் மற்றும் வளவாளர் குழு
அனுமதிகள் வழங்கப்படுகிறது. 077 526 5344

## பதவிக்கான தேடல்
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி......
யாழ்...., வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள். 50 பேருக்கு முன்னுரிமை.
✓ஆரம்பம் 15 000/- ✓தங்குமிட வசதி உண்டு
உடன் அழைக்க : 076 666 8385 , 076 678 1042

## FLC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.
40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 21.04.18 சனி காலை 8 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :23.04.18 மாலை 4 மணி
திருமணம் ஆகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550/=Kg
கனடா-1050/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## தேவை
யாழ் நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு கணனி வரைப் தெரிந்தவர்கள் (CorelDRAW, Adobe Photoshop) அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
T.P - 077 617 4029

## சாவகச்சேரியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

## நெல்லியடியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில், நெல்லியடி.
076 443 1576

## வேலையாட்கள் தேவை
வல்வையில் இயங்கும் அம்மா உணவகத்திற்கு
➤கொத்து மாஸ்டர்
➤சமையல் வல்லுநர்
➤சப்பிளையர்
வேலைகளுக்கு ஆண், பெண் ஊழியர்கள் தேவை, 18 வயதிற்கு மேல்
தொடர்புகளுக்கு : அம்மா உணவகம்
( மரக்கறிசந்தை முன்பாக , வல்வெட்டித்துறை )
0774563959


## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையாக உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பாங்குபெற வேண்டுகின்றேன்.

(3850)

ஓ! பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி

சென்.பீற்றேஸ் வீதி,
நவாலி
மானிப்பாய்.

இ.ஜெபராஜா

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னத்துரை பக்தகுணசீலன்
(உரிமையாளர் - பூங்கனிச்சோலை)

பிறப்பு: 196?.07.25 – இறப்பு: 2008.05.09

கண் இமைக்கும் நேரத்தில்
காலனாய் வந்த காவலர்கள்
கண் எதிரே நடத்திய கொடுமை
காலத்தால் ஆனதையா 10 ஆண்டுகள்

ஓடத்தில் விழுந்த ஓட்டைபோல் – உங்கள்
உடலில் விழுந்த ஓட்டைகளால்

தாழவும் முடியாமல் மீளவும் முடியாமல்
தத்தளிக்கின்றோம் தாங்கிப் பிடிக்க யாருமின்றி

நீராய்ப் பாய்ச்சிய உங்கள் செங்குருதி – இன்று
பூவாய் பூக்கிறது அருமைகளாய் சோலையிலே
பூலோகம் உள்ளவரை உங்கள் நினைவுகள்
பூங்கனிச்சோலையிலே பூக்களாய் பூத்திருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை

(3680)




புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்
## நாகலிங்கேஸ்வர பெருமான் (சிவன் சந்நிதி)

ஸப்ததள இராஜ கோபுரம் அமைய திருவருள் கைகூடியுள்ளது.

நிகழும் மங்களகரமான விளம்பி வருடம் சித்திரை மாதம் 9-ம் நாள் 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை பூர்வ ஸப்தமி திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபவேளையில் அடிக்கல் நாட்டு விழா இடம்பெறும்.

அடியவர்களே! இந்த முகூர்த்த கைங்கரியத்தில் கலந்து கோபுர வளர்ச்சிக்கு நிதி வழங்கி, எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
கரைச்சி நாகதம்பிரான் ஆலயம்

(இ-2328)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.